

# ஆலயமணி

ஆசிரியர் : புலவர் ஈழத்துச்சிவானந்தன்

போதொடு நீர்
சுமந்து ஏத்தி
புகுவார் அவர்பின்
புகுவேன்

ஆனி: 1988

விலை: ரூ. 7-00

ஐம்பது ஆண்டுகளின் அனுபவ முத்திரை
அனைவரும் மதிக்கும் அறுசுவை ஆகாரங்கள்

விடியும்போதே
ஒரு மகிழ்வு அரும்புகிறது

# "தாமோதர விலாஸ்"

சுத்தம் சுவை திருப்தி
உண்ணும் மகிழ்ச்சி மீண்டும் உந்தும்
**'ஆலயமணிக்கு'** ஆதரவு தருவோம்

தரமே எதற்கும் உரம்
தரமே எதையும் தாங்கும்
தரமே வாழ்க்கையின் தளம்

## "தாமோதர விலாஸ்"

239, கே. கே. எஸ். வீதி,
**யாழ்ப்பாணம்.**

ஆதவன் எழுகிறான் சஞ்சிகை
38. அம்பாள் வீதி,
நாயன்மார் கட்டு,
யாழ்ப்பாணம்.

திருவண்ணமலை ஆதீன குருமகா சந்நிதானம்

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

# வாழ்த்து

அன்பிற் சிறந்த நமது ஈழத்துச் சிவானந்தன் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம். தாங்கள் 'ஆலயமணி' என்னும் மாத இதழை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சி. ஆலயமணியின் ஓசை எங்கும் கேட்கவும்; எல்லோரும் கேட்டு வாங்கவும் வளர்ந்து சிறக்கவும் நெஞ்சு நிறைந்த வாழ்த்துக்கள்.

தங்கள் வெள்ளி நாக்குப் பேச்சால் தங்கள் நாட்டுடன் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளும் நயத்தகு பயன்களை பெறுவதுபோல் தண்ணர்தமிழ் வழக்கு எழுத்து வீச்சால்-பேனு உழவால் தமிழ்ச் சமூகம் இன்னும் இன்னும் பயன்பெற்று இருள்கடிந்து இன்புற்றுவாழ வாழ்த்துகின்றோம். பல நல் அறிஞர்களின் ஆக்கமும் அனுபவங்களும் ஆலயமணிக்கு அணிசெய்ய வேண்டும். ஆலயமணியின் அறிவோசையினுல் தடம்புரளாத தமிழர் சமயத்தின் உயிர்ப்புக்கள் மேலெழுந்து மேன்மை கொள் சைவ நீதிக்கு விளக்கம் கொடுக்க வேண்டும். சரியான சமய வாழ்க்கைக்கு மக்களை நெறிப்படுத்துதல் நோக்கமாக இருக்கவேண்டும்.

நம்மவர்களுக்கு கோட்பாடிருந்தென்ன? கொள்கையிருந்தென்ன? திறமை ஆற்றல்களும் இருந்தென்ன? வரைபடம் போட்டுக் கணக்கெடுத்துப் பார்த்தால் எல்லாம் கழிவுமயமாக குறைவுக்கோலமாகவே தென்படுகின்றன. இதற்குரிய காரணமென்ன? பற்றுறுதி தேற்றம் தெளிவு இன்மையே. சமய சமுதாய உலகில் நல்லறிவுத் தெளிவும் வாழ்வும் ஏற்பட்டால் வாழ்க்கை என்பது அருமையானதாயும், பயனுடையதாயும், இன்பத்துக்குரியதாயும் மாறி விடும். இந்த மாற்றத்திற்கு ஆலயமணி பணி செய்து கிடக்க இறைவன் திருவடிகளைச் சிந்தித்து; துணைநிற்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

உ

# நல்லை ஆதீன குருமகா சந்நிதானம்

## வாழ்த்துகின்றார்

சைவஅருட் பெருந்தகையீர்!

பேரன்புக்குரிய புலவர் ஈழத்துச் சிவானந்தன் நல்லை ஆதீனத்தோடு நெருங்கிய தொடர்புடையவர். ஆதீன கலா மண்டபத்தில் பலகால் இவர்களின் உள்ளங்கவர் பேருரைகளைக் கேட்டு இன்புற்றோம்.

சிலரின் பேச்சுநடை நன்றாக இருக்கும். ஆனால் அவர்கள் நன்றாக எழுதமாட்டார்கள். சிலர் செம்மையாக எழுதுவார்கள்; பேச்சுவன்மையிராது: ஆனால் அருட் கொடையால் புலவர் சிவானந்தனிடம் இரண்டும் ஒருங்கே அமையப் பெற்று மிளிர்வது நோக்கற்பாலது.

அவர்கள் வெளியிடும் ஆலயமணி என்ற சமய சஞ்சிகையின் அறிமுகப் பிரதியைக் கண்ணுற்றோம். இதற்கு உண்மையில் சைவமக்கள் ஆதரவளிப்பர் என்பது திண்ணம். புலவர் சிவானந்தன் ஒருபெரும் தமிழறிஞர் மட்டுமல்லாது பக்திமானும் சைவப் பெரியாரும் ஆவர். அவர்களின் பெரு நோக்குக்கான இக் கைங்கரியம் வளர்ந்தோங்க வேண்டி எமது உளமார்ந்த நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குகின்றோம்.

உ

# மணி ஓசை

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே...

## திருக்குட நன்நீராட்டு நாள்

நீண்ட நாள் நினைப்பின் பயன் 'ஆலயமணி' இதழாய் உங்கள் கரங்களில் தவழ்கிறது. இதனுடைய நோக்கம் பெரியது; பாரியது. இதனைத் தாங்கிக்கொள்ள வேண்டிய கடமை யாருக்கு உண்டென்பதும், இதற்கு உறுதுணையாய் ஊட்டமாய் இருக்க வேண்டியவர்கள் யார் யார் என்பதையும் எழுதிக்காட்டவேண்டியதில்லை.

பணபலமில்லாது பரமபதத்தையும் மனோபலத்தையும் பக்கபலத்தையும் நம்பியே ஆலயமணி பக்கம் பக்கமாக வளர இருக்கின்றது. இதுவளரும் இதை வளர்க்க வேண்டும் என்று கூறி என் முதுகில் தட்டிய தெய்வமணிக் கைகளை நினைத்துக் கொள்கிறேன்.

கல்லால் கட்டிய 'ஆலயமணி' ஸ்தூபிக்கு கும்பாபிஷேகம் செய்யும் போது இருக்கும் மனநிலையும் நிறைவுமே சொல்லால் கட்டிய இந்த இதழினை வெளியிடும் போது உண்டாவது தவிர்க்கமுடியாதது. திருக்குட நன் நீராட்டு நாளில் நெஞ்சம் கொள்ளும் துள்ளலுக்கும் பூரிப்புக்கும் சற்றும் குறையாமலேயே உங்கள் இதயக் குடத்தின் நல்லுணர்வில் ஊறிய நன்நீரால் ஆலயமணியை அபிஷேகிக்கின்றோம்.

ஒன்றைத் தொடங்கி கும்பாபிஷேகத்தையும் நடத்திவிட்டு என்ன நடக்கிறதென்றுபார் என்றுகூறிய பெரியோர்களையும் நண்பர்களையும் இப்பொழுது ஒவ்வொருவராய் விரல்மடித்து-குரல்கேட்டு புளகாங்கிதம் அடைகிறோம். ஒருமையில் முடிக்கவேண்டிய வாக்கிய அமைப்பை பன்மையில் குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் யோசிப்பது

புரிகிறது. காரணத்திற்கு ஒருவன் போதும், ஆனல் காரியத்திற்கு ஒருவன் மட்டும் ஒன்றும் செய்துவிட முடியாது. தனிப்பிரார்த்தனையே சித்திக்கும் என்றாலும், கூட்டுப்பிரார்த்தனையை நம்முடைய நாயன்மார்கள் வலியுறுத்தியதையும் நடைமுறைப்படுத்தியதையும் எண்ணத்தில் கொண்டுவர வேண்டும்.

ஈஸ்வர கிருபையும் ஈஸ்வர கோஷ்டியும் இருக்கும் வரை என்ன குறையும் இலோம்.

மாதந்தோறும் சந்திக்கவும் சிந்திக்கவும் மகேஸ்வரனின் திருவருள் பெருகவேண்டும்.

வணக்கம்

— புலவர் ஈழத்துச் சிவானந்தன்

# அடியும் முடியும்

— முருகையன்

எலியினது குடலிடையும்
நுணுக்குக்காட்டி இயல்விக்கும் தரம் வரையும்
நுனித்துப் பார்த்தோம்
வலு மிகுந்த றேடியோத் தொலைகாட்டிக்குள்
வசப்படுத்தத் தக்க அளவு ஆகாசத்தின்
பல இயல்பை
அனுமானப் பார்வை கொண்டு
பகுத்தறிந்தோம்
வெளியினது நிகழ்வுக் கால
நிலை அறிந்தோம்
எதிர்வுரைத்தோம்
பழங்காலத்தை
நிச்சயிக்கும் கணிப்புகளும் செய்து விட்டோம்.

இக்காலத்து இயல் கொண்டு
கணக்குப் போட்டோம்
எதிர் காலப் போக்குகளை முன் அறிந்தோம்
முற்கால மருமத்தை ஒதுக்கி நீக்கி
முன்னேறல் ஆனோம் நாம்
முடிவில்லாமல்,
அப்பாலும், அப்பாலும் நெடிது செல்ல
அதற்கப்பால்...
அதற்கப்பால்....
திகைத்து நின்றோம்.
நிற்காமல் மிகமெதுவாய்ப் பின்னும் செல்வோம்,
நிகழ்ச்சிகளின் திருவடியைக் காண எண்ணி
எதிர்காலப் போக்குகளை அறிதல் அன்றி
இயன்ற வரை அதை மாற்றும் போராட்டத்தும்
விதவிதமாய் முயலுகிறோம்—
விரும்பத்தக்க

விளைவுகளும் பெறுகின்றோம்.
முடியை நோக்கி
அதிவிரைவாய்ச் சென்ற உந்தல் குறைந்து குன்றி
ஆயாசம் கொண்டமையால்,
தள்ளாடுற்று
மெதுவாக அசைகின்றோம்,
எதிர்வுப் போக்கின் மேல் முனையை —
திருமுடியைக் — காண எண்ணி.

எட்டும் இனி என நினைத்தோம்
ஐந்தடிக்குள் இருக்கும் என்று சென்றாலோ...
இன்னும் சற்று மட்டும்
ஒரு சிறிது செலின்,
கைகளுக்குள்
வசப்படுதல் நிசம் என்று நிச்சயித்தோம்.
கிட்டுவது போல் இருந்து கிட்டாதாகிக்
கிடையாத தோற்றரவோ என ஐயுற்று
நெட்டுயிர்த்தோம்.
ஆனாலும்...
மீண்டும் மீண்டும் நிமிர்ந்தெழுந்து
மறுபடியும் நகரலானோம்.

அடிமுடி தேடும் படலம் இடையீடின்றி—
ஆதியும் அந்தமும் இன்றிப் படிக்க வேண்டும்
விட முடியாது அதை என்ற வேட்கையாலே
வேறெதற்கும் நேரமில்லை — எங்களுக்கு.
தடுபொடி தான் ஓயாது.
தலையைச் சாய்க்கச் சமயமில்லை.
உறங்குவது சரியுமில்லை.
விடுதலையை நோக்குகிறோம்
தயவு செய்து
வெவ்வேறு திசை நோக்கச் சொல்லாதீர்கள்.

# அப்பர் சுவாமிகளின் முதுமைப் பொறுமை

— கோவைகிழார்

1 காலநிலை:= உலக சரித்திரத்தில் சமய வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் குறிப்பிட்ட காலவரையறைகளுக்கு ஒருமுறை சமயப் பெரியார்கள் தோன்றி, சமய ஒழுக்கங்களை நிலைநிறுத்தும் பொருட்டுத் திருத்தங்கள் செய்து வந்திருப்பதை அறிவோம். பெரியார்கள் அடிக்கடி தோன்றியிருந்த போதிலும் 500 ஆண்டுகளுக்கு ஒருமுறை அவர்கள் சிறுசிறு தொகுதிகளாக அவதரித்து மிகப் பெருமை பொருந்திய சீர் திருத்தங்களைச் செய்து வந்திருக்கின்றார்கள். இச் செய்தியை விளக்கமாகக் கூறுமிடத்து 2500 – ஆண்டுகளுக்குப்பின் பாரதத்தில் மகா வீரரும், புத்தரும், சீனவில் கன்பூஸியசும் (Confucius) தோன்றி இவ்விரு நாடுகளிலும் புதுக்கொள்கைகளை நிறுவினார்கள். இனி 2000 ஆண்டுகளின் முன் யூதர்களின் இயேசுவும், போலும் (Paul) தோன்றி கிறிஸ்தவ சமயத்தை தோற்றுவித்தார்கள்.

1300 ஆண்டுகளின் முன் தமிழ் நாட்டில் அப்பரும் சம்பந்தரும், அரபு நாட்டில் முகமதுவும் தோன்றிச் சைவத்தையும் இஸ்லாமியத்தையும் நிலைநிறுத்தினார்கள். பிறகு 1000 ஆண்டுகளின்முன் தென்னிந்தியாவில் சைவமறுமலர்ச்சி ஏற்பட்டது. இறுதியாக 500 ஆண்டுகளின்முன் வடநாட்டில் சமய பக்தர்கள் தோன்றி பக்தி இயக்கத்தை நிறுவினார்கள். இவ்வாறு ஏணியின் படிபோல, சமயப் பெரியோர்களின் வாழ்க்கைகள் நமக்கு எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் தென்னாட்டில் தோன்றிய சைவப் பெரியார்கள் அப்பரும் சம்பந்தரும் ஆவார்கள். இவர்களிலே நெடுங்காலம் வாழ்ந்து உலகமக்களுக்குத் தமது அனுபவப்பயனை அளித்தவர் அப்பர் சுவாமிகள். அதே சமயத்தில் சின்னஞ்சிறு வயதிலேயே மிக ஆற்றலோடு திருத்தொண்டு செய்தவர் சம்பந்த சுவாமிகள். இவ்விருவரும் முதுமையின் பொறுமைக்கும், இளமையின் ஆற்றலுக்கும் நல்ல உதாரணங்களாக இருந்து மக்களின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள்.

இவ்விருவ்ரும் விதைத்த சைவ விதைகள் தற்போது சைவமரமாகி வளர்ந்து சைவப்பழங்களை யீன்று சிவாமிர்தத்தை ஊட்டிக் கொண்டு வருகின்றது. இவ்விரு பெருமக்களில் அப்பரைப்பற்றி சிறிது கூறுவோம்.

**2 இளமையில் கல்வி:-** அப்பர் சுவாமிகள் 6ம் நூற்றூண்டில் தமிழ் நாட்டிலே நடுநாடு என்று வழங்கிய ஆற்காட்டுப் பிரதேசத்தில் திருவாமூரில் சைவ வேளாளர் குலத்தில் அவதரித்தவர். அவர்கள் குலமும் குடும்பமும் நல்லபடிப்புப் பெற்று அரசர் கைங்கரியத்திலும், பொதுநலச் சேவையிலும் ஈடுபட்டிருந்தனர். அப்பரின் பிள்ளைத்திருநாமம் மருணீக்கியார் என்பது. அவருக்குத் திலகவதியார் என்ற ஒரு தமக்கை இருந்தார். அந்த அம்மைக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த கணவனூர் போரில் உயிர் துறந்தமையினுல் அந்த அம்மை கைம்மை நோன்பு மேற்கொண்டு ஒழுகினுர். இளவயதிலுள்ள அவ்விருவரின் பெற்ருேரும் இளமையிலேயே மறுஉலகம் சென்றுவிடடியினுல் மருணீக்கியார் தமக்கையாரின் ஆதரவில் வாழ்ந்து வந்தார்.

இளவயதிலேயே கல்வி கற்கும் காலத்தில் கணக்கற்ற நூல்களை ஆராயும் போது, அக்காலத்தில் சிறந்து விளங்கிக் கொண்டிருந்த சமணசமய நூல்களையும் ஓதத்தொடங்கினுர். அந்தச் சமயத்தில் அவருக்குப்பற்று அதிகரித்தது. தமக்கையாரின் அளவற்ற அன்பை விலக்கிக்கொண்டு சமயப்படுகுழியில் விழுந்தார். இதனைத் தாமே தம் வாக்காகிய ''காத்தாள்பவர் காதல் இகழ்ந்தமையால் கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி நீத்தாயகயம் புக நோக்கியிட, நிலைக் கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்'' என்ற பாசுரத்தில் கூறுகின்ருர். பிறகு சமண நூல்களை மேற்கொண்டு புலமை பெற்று சமணசமயக் குரவர் ஆகின்ருர். இக்காலத்திலும் நமது நாட்டில் எத்தனையோ இளைஞர்கள் தமக்குரிய காவலையிழந்து இறை ஸ்தலத்தில் போய்ச் சேருவதில்லையா? திரிவிதாங்கூரில் இவ்வித மதமாற்றம் மிகவும் பெருகி வருகின்றதல்லவா? இதனைத் தடுக்க நாம் என்ன செய்து வருகின்ருேம்.

**3 சமய மாற்றங்கள்:-** தனது தம்பியாராகிய மருணீக்கியார் சமணப் படுகுழியில் வீழ்ந்ததைக் கண்டு மிகவும் மனம் வருந்தித் திலகவதியம்மையார் திருவதிகை வீரட்டானத்துக்குச் சென்று அங்கே திருக்கோயிலிலே பணிவிடைகள் செய்து கொண்டு இறைவனை வணங்கும் பொழுதெல்லாம் தன் தம்பியாருக்கு நற்குணம் வரவேண்டுமென்றும், சைவத்திற்குத் திரும்பி வரும்படி கருணைபுரிய வேண்டும் என்றும் தொழுது கொண்டேயிருந்தார். அவருடைய பிரார்த்தனை ஒருநாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறைவன் மருணீக்கியார் மீது மறக்கருணை காட்டினுர். மருணீக்கியாருக்கு பொறுக்க வொண்ணுத குடல் நோய் வந்தது. சமண மருத்துவர்களும் மாந்திரீகர்களும், குரவர்களும் என்ன செய்தும் பயன்படவில்லை. குடல் நோய் அதிகரித்தது. வலி தாங்க முடியாமல் போகவே தமக்கையை நினைத்தார். முதலில் ஆள் அனுப்பி விட்டு தமக்கையாரிடம் தாமே வந்தார்.

மிகுந்த மகிழ்ச்சியுடனே தம்பியாரை வரவேற்று அதிகை வீரட்டானத்து ஆலயத்துக்கு அழைத்துக் கொண்டு போய்த் திருநீறு சாத்தியருளினுர். நோய் நின்றது; சைவம் பழுத்து எழுந்தார். அருள்பெற்ருர். இறைவனை வணங்கி திருப்பாடல் அருளிச் செய்தார். அதுதான் ''கூற்ருயினவாறு'' என்ற தொடக்கத்துப் புகழ்பெற்ற பதிகம். அது முதல் மருணீக்கியார் திருநாவுக்கு அரசனுனுர். சமணராயிருந்தவர் கொழுத்த சைவரானுர். எத்தனை எளியவழி, வெறுந் திருநீறு சாத்தியதே போதும் மதம் மாற்றத்துக்கு வேறென்ன கழுவாய் வேண்டும்? பணவிரையம் வேண்டாம். சடங்குகள் வேண்டாம். பிறருக்குத் தான தருமங்கள் வேண்டாம். தக்க ஆசாரியனுல் திருநீறு பெற்ருல் போதும் அகத்தூய்மை வேண்டுமேயொழிய வெளித்தூய்மை வேண்டியதில்லை. இந்த நாட்டிலும் புறத்தே சென்ற ஏழைச் சமையிகளைத் திருப்பி அழைத்துக் கொள்வதற்குத் திருநீறு சாத்துதலே போதும்; அதனையே நாகர்கோயில் தொண்டன் ஆசிரியர் அவர்கள் சாதனமாகக் கொண்டு செய்து வருகின்ருர்.

4 துன்பத்தில் பொறுமை:- சமணத்திலிருந்து புறத்தே சென்று சைவத்தை மீண்டும் மேற்கொண்ட மருணீக்கியார் மீது சமணர்கள் பொருமையும் சினமுங் கொண்டார்கள். தங்கள் அரசனுகிய மகேந்திரபல்லவனிடம் அபவாதம் கூறினுர்கள். மகேந்திரபல்லவனும் திருநாவுக்கரசரை தண்டிக்கும்படி ஏவினுன். நஞ்சு கொடுக்கப்பட்டது அது ஒன்றும் செய்யவில்லை, யானை ஏவப்பட்டது. அது அவரைத் தொடவில்லை. நீற்றறையில் இட்டார்கள் அவர் அதனைத் தென்றலைப்போல் அநுபவித்தார். இறுதியில் கல்லைக் கட்டி கடலிலிட்டார்கள். கல்லே தெப்பமாகிக் கரையில் அவரைச் சேர்த்துவிட்டது. பிரகலாதனைத் தண்டித்த இரணியனுடைய தோல்விகளை திருநாவுக்கரசர் மூலம் பல்லவனிடம் கண்டார்கள்.

அப்போது நாவுக்கரசர் பாடிய தேவாரங்கள் மிகச் சிறந்தவை. அச்சொற்களில் மிளிர்ந்திருக்கும் அச்சமின்மை, வீரம் முதலிய பண்புகளை எவரே அறியமாட்டார்கள்? ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற தேவாரத்திலுள்ள வீரச்சுவையை வேறு எந்த நூலில் காண முடியும்? தோல்வியுற்ற அரசனும் சமணர்களும் சைவர்கள் ஆனுர்கள். இச்சரிதம் உங்களுக்கு எடுத்துக்காட்டல்லவா? திருநாவுக்கரசர் தண்டனைகள் பட்டகாலத்தில் காட்டிய பொறுமைக்கு அளவுண்டா? துன்பத்தில் காட்டும் பொறுமையே உயர்ந்த பண்பாட்டின் சிறப்பு என்று அறியலாம்.

5. **சமயச் சார்பு:-** தாம் மேற்கொண்ட சைவ சமயமே உயர்ந்த சமயம் என்று கண்ட திருநாவுக்கரசர் அந்த மெய்ச்சமயத்தை உலகமெங்கும் பரப்பவேண்டுமென்ற பேரவாக் கொண்டார். அன்பர்கள் புடைசூழ கோயில்கள் தோறும் சென்று வழிபாடுகள் செய்து அரியகருத்துக்கள் கொண்ட தேவாரங்களைப் பொழிந்தார். அவ்வாறு பொழியும்போது இனிமையான இசைகளோடு சமயக் கொள்கைகளைப் போற்றினர். சொல்லும் பொருளும் பொருந்தியிருக்க இன்னிசையும் துணைகொண்டு விளங்க அவருடைய தேவாரம் எவரைத்தான் கவராது? இந்த முயற்சியில் வெற்றியும் பெற்றார். இந்தமுறையில் சமயப்பிரசாரம் செய்து கொண்டு போகும்போது நாட்டு மக்கள் எல்லாரும் சைவத்தில் ஈடுபடத் தொடங்கினர்கள். இறைவனை வழிபடாத மக்கள் எல்லோரும் சைவத்தில் ஈடுபடத் தொடங்கினர்கள்.

இறைவனை வழிபடாத மக்கள் எல்லோரும் கோயில்களுக்குச் சென்று இறைவணக்கம் செய்தார்கள். அவர்கள் பாடும்படியான பாடல்களும் மனஎழுச்சியும், மனத்தூய்மையும், மனத்திட்பத்தையும் உடைய தமிழ்ப் பாக்களை பிறமொழியிலல்லாமல் தமது தாய்மொழியிலேயே வழங்கும் முறையைக் கண்ட எல்லா மக்களும் அவ்வழிபாட்டில் ஈடுபட்டார்கள். இந்த முறையைக் கைக்கொண்டு கிறிஸ்தவர்கள் பல்லோரைக் கவர்ந்துகொண்டார்கள். நீங்களும் அவ்வாறே செய்து அவர்களைத் திருப்பியழைக்கவேண்டும். தாய்மொழியில் இன்னிசை, அரும்பொருள், அன்புமயம் இவைகள் இருந்தால் எவரே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இந்த முறையாக திருநாவுக்கரசர் சமயப் பிரசாரம் செய்துகொண்டு போகையில் மூன்று முறை சம்பந்த சுவாமிகள் என்ற இளைய ஆச்சாரியாரை சந்தித்தார். அப்போதுதான் அவரால் அப்பர் என்ற பெயர் இடப்பட்டது. இவ்விரண்டு சமயக்குரவர்களும் தமிழ்நாடு முழுவதிலும் சமயப்பிரசாரம் செய்து சைவத்தைப் பரப்பினர்கள். வெகு தீவிரமாகப் பிரச்சாரம் செய்து கொண்டு போகையில் அப்பர் ஒருமுறை உண்ணுவிரதம் இருக்க வேண்டி வந்தது. பழையாறை எனுமிடத்தில் சமணர்கள் சிவாலயத்தை மண்ணுக்குள் புதைத்து விட்டார்கள். அப்பர் உண்ணுவிரதமிருந்தார். அது கண்ட அரசன் கோயிலை வெளிப்படுத்திப் புதுப்பித்தான். உண்ணுவிரதத்தால் அவர் கருத்து நிறைவேறிற்று. உண்ணுவிரதமென்பது தற்கால இயக்கமென்று எண்ணவேண்டாம். அப்பர் காலத்திலேயே அது தொடங்கப்பட்டது.

6. **கடும் துறவும் எளிய தோற்றமும்:-** அப்பர் நீண்ட காலம் வாழ்ந்தவர். உலக வாழ்க்கையில் கடுமையான துறவறத்தையே பூண்டார்.

தனக்கென வாழா பிறர்க்குரியாளராய் உடல், பொருள், ஆவி மூன்றையும் இறைவனுக்கே தத்தம் செய்துவிட்டு மக்களைச் சமயத்தில் ஈடுபடச் செய்வதே தனது நோக்கமாகக் கொண்டு நாடு முழுவதும் சுற்றினார். அவருடைய தோற்றம் மிகவும் எளிமையானது. அதனை வெகு நன்றாகச் சேக்கிழார் சுவாமிகள் வருணித்திருக்கின்றார்.

''மார்பாரப் பொழி கண்ணீர் மழை வாருந் திருவடிவும் மதுரவாக்கில்
சேர்வாருந் திருவாயில் தீந்தமிழின் மாலைகளுஞ் செம்பொற்றாளே
சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும் தாமும் ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்செல்வார்''

இந்தச் செய்யுளில் வருணிக்கப்பட்டிருக்கும் ஓவியம் எத்தனை சிறந்தது. சிறிது ஆராய்ந்து பாருங்கள். உலகத்திலுள்ள எந்தச் சமய ஆசாரியரும் இத்தனை எளியபொலிவுள்ள தோற்றத்தைக் கொண்டிருந்தாரா? தோற்றத்தில் பொலிவு மட்டுமா? அவருடைய கொள்கைகள் முழுவதும் அவ்வுருவத்தில் ஒளிசெய்கின்றனவல்லவா? கைத்தொழிலின் மேன்மையென்று இக்காலத்தில் மேடைகளில் பேசுகின்றார்கள். அப்பரோ அதனைத் தன்னுருவத்திலும் செயலிலும் நிகழ்த்திக் காட்டினார். உழவாரத் திருப்பணியென்பது அவருடைய பணியாகும். அதுவே சேவையுமாகும். இக்காலத்தைப்போலவே அக்காலத்திலும் கோயில்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தன; மக்களுடைய வழிபாடு இல்லாத காரணத்தினால் கோயில்களில் கல், முள், செடி, கொடி படர்ந்திருந்தன. அதை நீக்கி கோயில் வழிபாட்டை செயல் முறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று துணிவு கொண்ட அப்பர் தானே உழவாரப் படைகொண்டு தன் கையாலே சேவை செய்தார். அதைக் காணும்போது பின்பற்றும் எவரும் அச்சேவையில் ஈடுபடமாட்டார்களா? விரைவிலே கோயில்களெல்லாம் புனிதமாக்கப்பட்டன. மக்களெல்லாரும் சமயசேவையில் ஈடுபட்டார்கள். அப்பருடைய சரிதத்தை அறிந்த பின்னராவது நமது நாட்டு மக்கள் கோயில்களைத் தூய்மையாக வைக்க மாட்டார்களா?

7. சேவை:- திருத்தொண்டு அல்லது சேவை செய்வதில் அப்பர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அவர் வாழ்ந்த காலத்து மக்களுக்கு மட்டுமல்ல இந்தக்காலத்து மக்களுக்குங் கூட அவரே சிறந்த எடுத்துக்காட்டு ஆவார். திருத்தொண்டு புரிவதில் பொதுமக்கள் ஈடேற வேண்டுமென்ற கருத்திலே விளங்கினார். துன்பப்படுகின்றவர்கள் எவராயிருந்தபோதிலும் அவருடைய துன்பங்களைக் களைந்தார். ஒருகாலத்தில் தன்னை விருந்தினுக்கழைத்த அப்பூதி அடிகளுடைய மூத்தமகன் அரவால் தீண்டப்பட்டு உயிர்துறந்ததைக் கேட்ட அளவில் பதிகம் அருளிச் செய்து உயிர்ப்பித்தார். உயிர்கள் மீது அவருக்கிருந்த கருணைக்கு

அளவில்லை. கிறிஸ்துவின் சரிதத்தில் பேசப்படுகின்ற அற்புதங்களைக் கண்டு போற்றுகின்றோம். அப்பருடைய சரிதத்தில் நஞ்சு நீக்கப்பட்டு இறந்தவன் பிழைப்பிக்கப்பட்டான் என்றால் நாம் ஏன் வியக்கக் கூடாது? இப்படிப்பட்ட சேவை, திருத்தொண்டுகள் பலவும் சமயாசாரியர்களுடைய சரிதங்களில் காண்கிறோம். மக்களை நல்வழிப்படுத்தி திருத்தொண்டுகளில் ஈடுபடுத்துவதற்காகவே சமயாசாரியர்கள் இவ்வற்புதங்களைச் செய்தார்கள்.

இந்த வகையில் திருத்தொண்டுகளைச் செய்து தமது முதிர்ந்த வயதாகிய எண்பத்தொன்றில் அப்பரடிகள் இறைவனுடைய திருவடிகளையடைந்தார்கள். அத்தனை முதிர்ந்த வயது வரையில் மிகப் பொறுமையே தமது பண்பாடாகக் கொண்டு உலகவாழ்க்கை நடத்திய பெரியார் அப்பரடிகள் ஆவார். அவரைப் போலவே நாமும் சமயச் சேவையில் ஈடுபட்டு நமது சமய ஆர்வத்தைப் பெருக்குவோமாக;

அப்பரைப்பற்றிய துதியோடு இதனை முடிப்போமாக.

''இடையறாப் பேரன்பும் மழையாரும் இணைவிழியும் உழவாரத்தின்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து
[வாழ்வாம்''

— நன்றி ஞானசம்பந்தம்

---

அடுத்த இதழில்

ஒரு சிந்தனை வெளிப்பாடு....

## ஒழுங்கும் ஒழுக்கமும்

பேராசிரியர் ம. ச. விமலானந்தம்
எழுதுகிறார்.

# "எல்லோரும் இன்புற்றிருக்கவே"

வி. சிவசாமி M. A.

உலகிலே மனிதன் தோன்றிய காலம் தொட்டுச் சமயமும் நிலவி வந்துள்ளது. கற்காலம், செம்புக்காலம் ஆகியனவற்றைத் தாண்டி, மனிதன் முன்னேறிக் கொண்டு வருகையில், உலகியல் விடயங்களில் மட்டுமன்றி, ஆன்மீக விடயங்களிலும் அவன் ஈடுபட்டு வந்துள்ளான். இரும்புக்காலம் தொட்டு, மனிதனின் நாகரிக முன்னேற்றம் மேலும் அதிகரித்தது. ஆனால், புராதன ஆற்றங்கரை நாகரிகங்கள் — நைல் யூப்பிரற்றீஸ் — ரைகிறிஸ், சிந்து, குவாங்கோ ஆற்றோர நாகரிகங்கள் யாவும் இரும்புக் காலத்திற்கு முற்பட்டனவே. இந்நாகரிகங்களிலே சமயவாழ்வு ஒரு முக்கியமான இடத்தினைப் பெற்றிருந்தமை பற்றித் தொல்லியல் சின்னங்கள் சான்று பகருகின்றன.

மனிதன் தொடர்ந்து முன்னேறி வருகையிலே, கி. மு. 6-ம் நூற்றாண்டு அளவிலே பழைய உலகின் — ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா ஆகிய கண்டங்களின் சில பகுதிகளிலே நாகரிக வளர்ச்சியுடன், மனித சிந்தனை வளர்ச்சியும் நன்கு ஏற்பட்டது. அவன் தன்னைப் பற்றி மட்டுமன்றித் தான் வாழ்ந்த சமூகம், தனக்கு அப்பாற்பட்ட பரம் பொருள் பற்றியும் புதிய முறையிலே அணுகினான்; புதிய விழிப்பு ஒன்று ஏற்பட்டது. இதனாலே, சமகாலச் சமய, சமூகச் சீர்கேடுகளைக் களைந்து புதியதொரு உலகினைக் காண மனிதன் முற்பட்டான் எனலாம். இக்காலகட்டத்திலேதான், இந்தியாவிலே உபநிஷத தத்துவ ஞானிகள், புத்தபிரான், மஹாவீரர் முதலியோரும், சீனாவிலே கொன்வூசியஸ், தாஒசே ஆகியோரும், பாரசீகத்திலே சொருஸ்ரரும், யூதர் மத்தியிலே ஐசாயா தீர்க்க தரிசியும், கிரேக்க நாட்டிலே சோக்கிரத்திஸ், பிளேட்டோ முதலியோரும் வாழ்ந்து மனிதகுல ஈடேற்றத்திற்குப் பல வழிகளிலே, அவ்வந்நாடுகளில் உழைத்து வந்தனர். சமூக சமத்துவம், ஒழுக்கநெறி, இறைவன் பற்றிய உன்னதக் கோட்பாடு முதலியன பற்றி மேற்குறிப்பிட்ட ஞானிகளிலே சிலரோ, பலரோ புதிய கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளனர். பிரபல விஞ்ஞானியும், உலக வரலாறு பற்றி எழுதியவருமான எச். ஜி. வெல்ஸ் எனும் அறிஞர் உலக வரலாற்றில் இக்கால கட்டத்தினை ஒரு முக்கியமான காலமென அழுத்திக் கூறியுள்ளார். மனிதகுலம் இக்காலத்திலே குமரப் பருவத்தினை அடைந்துவிட்டதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

பழைய காலம் தொட்டே மனிதன் தன்னைப் பற்றியும், பிறமனிதர் பற்றியும், தான் வாழ்ந்த சூழ்நிலை பற்றியும் சிந்தித்து வந்துள்ளான். வெறும் சடப்பொருளில் மட்டும் அவனின் கவனம் செல்லவில்லை; தனக்கும், மனிதகுலத்திற்கும், உலகிற்கும் அப்பாற்பட்ட சக்தியொன்று இப்பிரபஞ்சம் அனைத்தையும் ஆக்கி, ஒழுங்குபடுத்தி, ஆண்டுவருதலையும் உணர்ந்துள்ளான். இச் சக்தி — கடவுள், அல்லது இறைவன் உலகெங்கும் நீக்கமற நிறைந்தும், அப்பாலும் உள்ளார்; அதே வேளையில், ஆன்மாக்கள் மீது இயல்பான அன்பு கொண்டவர்; அவர்களின் உலகியல் செழிப்பு, குறிப்பாக ஆன்ம ஈடேற்றம் ஆகியவற்றிலும் என்றும் ஈடுபாடுள்ளவர் என்பதையும் அவன் மறைஞான ரீதியிலும் உணர்ந்துவந்துள்ளான். இவ்வாறு இயங்கும் பரம்பொருளாம்இறைவனை உலகின் பலபாகங்களிலும், அவ்வப்பகுதி இயற்கைச் சூழ்நிலை, மக்களின் சமூக நிலைக்கேற்பப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறான். பல்வேறு வழிகளிலே, பலவகையான வழிபாட்டு முறைகளாலே வணங்கப்படுகிறான். ஆனால், அடிப்படை நோக்கிலே உலக மதங்களிடையே வேற்றுமையிலும் பார்க்க ஒற்றுமையே மேலோங்கிக் காணப்படும். "பரம்பொருள் ஒன்று; ஞானிகள் அதனைப் பலவாறு அழைப்பர் (ஏகம் ஸத் விப்ராஹ பஹிதா வதந்தி)" என இருக்குவேதகால ரிஷி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்து இன்றுவரை இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாக இலங்குகின்றது. உலகிலே தோன்றிய சமய, மறைஞான மரபுகளிலே மனிதன் தான் மட்டுமன்றி, ஏனைய மனிதரும் ஈடேற்றம் பெறவேண்டுமென விரும்பினான். புறவாழ்விலே சமூகத்திலும், அகவாழ்விலே ஆன்மீகத்திலும் ஈடேற வேண்டுமென அவன் விரும்பினான். சுயநலவாதியாக அன்றி, பரோபகாரியாக வாழுதலையே அவன் இலட்சியமாக்கினான். இந்நோக்கு உலகிலுள்ள அனைத்து மதங்களிலும் காணப்படுகின்றது.

இந்து சமயத்தினைப் பொறுத்தமட்டில், மேற்குறிப்பிட்ட இலட்சியம் வேதகாலம் தொட்டு நிலவிவருவது குறிப்பிடற்பாலது. வேதகாலத்திற்கு முற்பட்ட சிந்துசமவெளி நாகரிகத்திலும் இக்கருத்து நிலவியிருக்கலாம். ஆனால் அதற்குத்தக்க சான்றுகளில்லை. எனினும், இந்து சமய வேதங்களின் பல்வேறு பகுதிகளிலும் இக்கருத்து முகிழ்த்திருப்பதை அறியலாம். இக்கருத்துத் தொடர்ந்து பிற்கால இந்துசமய மரபிலே ஊடிழையாக இலங்கி இன்றுவரை நிலவுகின்றது. மனித வர்க்கம் மட்டுமன்றி அனைத்து உயிர் வர்க்கங்களுமே இன்புற்றிருக்க வேண்டுமென்பதே இந்துசமயத்தில் அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. இக்கருத்துக் குறிப்பாகப் பக்திப் பாடல்களிலும், ஆசீர்வாதங்களிலும் நன்கு அழுத்திக் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்துசமயக் கிரியைகள் அனைத்தினதும் முடிவிலே வரும் ஆசீர்வாதம்

குறிப்பிடற்பாலது. இதன் இறுதியிலே ''எல்லா உலகமும் இன்புற்று வாழ்வதாக (லோகாஸ்ஸமஸ்தாஸ் ஸுகிநோபவந்து)'', ''எல்லா மக்களும் இன்புற்றிருப்பார்களாக (ஸர்வேஜநாஸ்ஸுகிநோ பவந்து)'' எனவரும் உயர்ந்த இலக்கு நன்கு கவனித்தற்பாலது. இந்துசமய கிரியைகள் பெரும்பாலும் சம்ஸ்கிருத மொழியில் இருப்பதால் பலருக்கு இவற்றின் பொருள் விளங்காமலிருக்கலாம். மேலும், குறிப்பிட்ட சமயக்கிரியையினை ஒருவர் ஆத்மார்த்தமாகவோ (தனக்காகவோ), அல்லது பரார்த்தமாகவோ (பிறருக்காகவோ) செய்தாலும் முடிவிலே வரும் ஆசீர்வாதத்திலே மேற்குறிப்பிட்டவை இடம்பெறும். ஆகவே இங்கு தனி மனிதனின் நன்மை மட்டுமன்றி, மனித குலம் அனைத்தினதும் நன்மையுமே வலியுறுத்தப்படுகின்றது. ஒருவர் குறிப்பிட்ட கிரியை தனக்குத் தான் செய்தாலும், அதனால் அவர் மட்டுமன்றி, அவரின் குடும்பமும்; அவர் வாழும் சமூகமும், உலகமுமே நன்மையடையும். இத்தகைய பரோபகாரத்துக் கருத்து கிரியைகளின் அடிப்படையிலுள்ளது. ஆகவே; எவர் எதற்காகச் செய்கின்ற கிரியையாகிலும், அதனால் மனித சமூகம் முழுவதுமே நன்மையடையும் என்ற இலக்கு இங்கு வெள்ளிடைமலை. இத்தகைய பரோபகார நோக்கு இந்து சமயத்தின் பல்வேறு அமிசங்களிலும் காணப்படுகின்றது. ஆனால் சில புரோஹிதர் ஆசீர்வாதங்களின் முடிவிலே ''ஸர்வே சைவ ஜநாஸ்ஸுகிநோ பவந்து (சைவ மக்கள் அனைவரும் இன்புற்றிருப்பாராக)'' எனக் கூறுவது இச் சமய மரபிற்கே முரண்பட்டதாகும். ஏனெனில், இக் கருத்து இந்துசமயத்தின் சமரஸ நோக்கிற்கு நேர் எதிரானதாகும். மேலும், 'மதியார்க்கும், மதிப்பவர்க்கும் மதி கொடுக்கும் மதியே'' என இறைவனை — சிவபெருமானை நோக்கி இராமலிங்க சுவாமிகள் விளித்துக் கூறியுள்ளார்.

மனிதன் இயல்பாகவே பரோபகாரியாக இருக்கவேண்டுமென்பது குறிப்பிடற்பாலது. இறைவன் எவ்வாறு தன்னலங்கருதாது உயிர்களுக்கு அருள்பாலிக்கின்றாரோ, அவ்வாறே, இறை அமிசம் அல்லது ஒளியுள்ள மனிதனும், தன்னலமற்றவனாக வாழவேண்டும் என்பதும் இயல்பே. இத்தகைய தமக்கென வாழாப் பிறர்க்குரியாளர் இருப்பதாலேதான் இவ்வுலகம் தொடர்ந்து நிலவுகின்றது எனச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சங்கப் புலவன் ஒருவன் குறிப்பிட்டுள்ளான். எம்நாட்டு ஞானியாகிய யோகசுவாமிகளும் ''ஒரு பொல்லாப்பும் இல்லை'' எனக் கூறியுள்ளமையும் நினைவு கூறற்பாலது.

இறையநுபவம் பெற்றவர்கள் அவ்வநுபவத்தினை மற்றவர்களும் பெற்று உய்ய வேண்டுமென விரும்புவர். தமிழ்ச் சைவ மரபில் இக் கருத்து நன்கு அழுத்திக் கூறப்பட்டுள்ளது. ''யான் பெற்ற இன்பம்

பெறுக வையகம்'' எனத் திருமூலர் ஓர் உயர்ந்த இலட்சியத்தினை முன் வைத்துள்ளார். அப்பர் சுவாமிகளும், தாயுமான சுவாமிகளும் மக்கள் அனைவரும் இறைவன் இயல்பாகவே அருளும் பேரின்பத்தைப் பெற்று உய்யுமாறு அவர்களை அன்புடன் வரவழைக்கின்றனர்.

''மனிதர்காள் இங்கேவம் ஒன்று சொல்லுகேன்
கனிதந்தால் கனி உண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழலீச னெனும் கனி
இனிது சாலவும் ஏசற்றவர்க்கே''

எனத் திருநாவுக்கரசர் அனைவரையும் வருமாறு அழைக்கின்றார்.

''காகமுறவு கலந்துண்ணக் கண்டீர கண்டாகாரசிவ
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே''

எனத் தாயுமானவர் சிறப்பாக அனைவரையும் அழைக்கின்றார். ஆகவே, இந்து சமய வாழ்விலே ஒருவன்தான் மட்டுமன்றி மனித சமூகமனைத்துமே இன்புற்றிருப்பதையே இலக்காகக் கொண்டு வாழுதல் இயல்பான போக்காக இருக்கவேண்டும் என்பது தெளிவு. இப்போக்கு இந்துக்கள் அனைவரிடத்தும் காணப்படும்போது உலகில் எவ்வகையான தொல்லையு மிருக்காது. இக் கருத்தினை மக்களிடையிலே நன்கு பரப்புதலிலே இப்பொழுது வெளிவரும் ''ஆலய மணி'' முக்கியமான ஒரு பங்கினை வகிப்பதாக.

''எல்லாரு மின்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே''

(தாயுமானசுவாமிகள்)

வாழ்முதல் ஆகிய பொருளே

ஆலயமணி வளர்ந்து

சிறக்க

உன் திருவடிகளை வணங்குகின்றோம்

V

# WOODLANDS COMPANY

General Merchants & Commission Agents

192, 4th Cross Street,

COLOMBO-11.

ஓசையாய் ஒலியாய்

எங்கும் நிறைந்தவனே

"ஆலயமணி" இதழ்

எல்லா இடங்களிலும்

இருக்க

அருள்க!

வணக்கம்!

*Sivashanmugarajah & Co*

General Merchants, Commission Agents &

Export suppliers, Dealers in all Kinds of

EKEL Brooms, coir Brooms, Coir Yarns

Jute Twine, Paper Bags and all other local produce

45, 4th Cross street,

COLOMBO-11.

# அருள்நெறியும் மாதரும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள?” என்று திருவள்ளுவர் வினு எழுப்பவில்லை விடையையே வினுப்போல எழுப்புகின்றார். பெண்ணினம் பாராட்டுதலுக்கும், பெருமைக்கும் உரியது. பெண் எதையும் அதிகமாக விவாதிக்காமல் ஏற்றுக்கொள்வாள், நம்புவாள், வாழ்ந்தும் காட்டுவாள். அதனாலன்றோ சேக்கிழார் பரவையாரை பாராட்டுவது போல, பெண்ணினத்தையே பாராட்டுகின்றார். சேக்கிழார், சுந்தரர் வாயிலாகப் பரவையாரைப் பாராட்டும்போது ‘கற்பகத்தின் பூங்கொம்போ?’ என்று வர்ணிக்கின்றார். கற்பகதரு, கருதியவை அனைத்தையும் தரும் என்பது மரபு. அதுபோல, நல்லபெண், கருதியவை அனைத்தையும் தரவல்ல ஆற்றல் உடையவளாக இருப்பாள் என்பது பெறப்படுகிறது.

ஏழாம் நூற்றூண்டில் சமயவாயிலாக சமுதாயப் புரட்சியை நிகழ்த்திய நமது அப்பர் அடிகளும், திருஞானசம்பந்தரும் பெண் இனத்தின் பெருமையை - மனையறத்தின் மாட்சியை விளக்கப் பெரிதும் தொண்டாற்றி உள்ளனர். அவர்கள் காலத்தில் வடபுலத்தில் இருந்துவந்த பௌத்தமும் சமணமும், தமக்கென நாடும், மொழியும், இறையும் இல்லாத - சுழன்று திரிந்த மாயாவாதமும் பெண்ணினத்தை இழிவுபடுத்தின. மனையறத்தை சிற்றின்பம் என்றும் விலங்கு என்றும் வர்ணித்தனர். இயற்கை நெறிக்கு மாறுக துறவு நெறியை வலியுறுத்தினர். இக்கொள்கையைக் கடிந்து நாளும் இனிய தமிழால் அகனைந்திணை வழக்கத்தின் பெருமையை முழங்கினர் நாயன்மார்கள். ஈருருவமும் ஒருருவமாய அம்மையப்பன் வழிபாடுகூட ஏழாம் நூற்றூண்டிலேயே முதன்மைப் படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

வாழ்க்கை இனியது - இலட்சிய நோக்குடையது. வாழ்க்கையை மகிழ்ந்து நோக்கி, இனிமைப் பண்புடையதாக்கி இலட்சிய நிறைவிற்குரியதாக்கிக் கொள்ளும் முயற்சி வேண்டும். இங்ஙனம் வாழும் முறையையே திருவள்ளுவர் ‘வாழ்வாங்கு வாழ்தல்’ என்று குறிப்பிடுகின்றார். வாழ்வாங்கு வாழும் நெறிக்கே அருள்நெறி என்று பெயர்.

திருஞானசம்பந்தர் அருளிய தமிழ், அருள்நெறித் தமிழ், அப்பர் அடிகள் வளர்த்த நெறி நன்மை பெருகு அருள்நெறி. காந்தி அடிகள், நின்று வாழ்ந்த நெறி அருள் நெறி.

(1)

அருள்நெறியின் முதல்நெறி, அன்புசெய்வது, வாழ்க்கையின் முன்னும் பின்னுமாய முழு இலட்சியம் அன்பு செய்தலே ஆகும். இவ்வுடம்பின் அகத்துறுப்புக்களையும், புறத்துறுப்புக்களையும் கூர்ந்து நோக்குவோமாயின் அன்பு செய்தற்கென்றே அவை அமைந்திருப்பது புலனாகும்.

அன்பின் வழியது உயிர்நிலை என்பது குறள். பண்பாளருக்குக் காட்டும் அன்பு பண்பை வளர்க்கும். பகைவனுக்குக் காட்டும் அன்பு பகையைக் குறைக்கும். அன்பு செய்யும் ஒழுக்கத்தை ஆண்மகன் முயன்று பெறுகிறான். பெண்ணோ இயல்பிலேயே பெற்றிருக்கிறாள். அதனால்த்தான் அன்புக்கு உவமையாக தாயே பேசப் பெறுகிறாள். இலக்கியங்களில் பெண்பருவம் தோறும் அன்பு காட்டுவதில் முதிர்ச்சி அடைகிறாள். பருவத்திற்குரிய அன்பையும், தியாகத்தையும் அள்ளிச் சொரிகிறாள். அன்புப் பாடம் கற்றுக்கொடுக்கும் தலையாய ஆசிரியர் குலம் பெண் குலமே.

2

அருள் நெறியின் இரண்டாவது ஒழுக்கம், அறநெறிநிற்றல் அறத்தின் பாற்பட்ட ஒழுக்கக்கூறுகள் பலபல எனினும், பிறருக்கு உதவி செய்தலும் அங்ஙனம் உதவி செய்யும் ஆற்றல் கைகூடாத போதும் துன்பம் செய்யாது இருத்தலுமே சிறந்த அறப்பண்பு. இப்பண்பு மனித குலத்தில் வளர்ந்தால் சட்டங்களும் திட்டங்களும் இல்லாமலே சோசலிச சமுதாய அமைப்பை நாம் கண்டுவிட முடியும். இத்தகைய அரிய பண்பை இயல்பிலேயே பெண்மை பெற்று இருப்பது பாராட்டுதற்குரியது ஒரு பெண் தாய்மையை அடைகின்ற பொழுது அவள் செய்யும் தியாகத்திற்கு ஒப்பான வேறு தியாகத்தை நாம் காட்ட முடியுமா? தன் செங்குருதியையே பால் உணவாக மாற்றி குழந்தைக்கு ஊட்டி வளர்க்கிறாள். இதைவிடச் சிறந்த கருணையை நாம் காணமுடியுமா? இதனாலன்றோ நம் மாணிக்கவாசகர் இறைவனைப் பாராட்டும் போது தாயாய் முலையை தருவானை என்று குறிப்பிடுகின்றார். அது மட்டுமல்ல குழந்தையின் நோய்க்கு தான் மருந்துண்டு பத்தியம் காக்கும் பண்பும் தாய்மை இடத்திலே உண்டு. இத்தகைய சிறந்த இயல்புகளையே மற்றவர்களுக்கும் இவர்கள் கற்றுக் கொடுப்பார்கள். அதனால் வையகம் துயர் நீங்கி வானுற வோங்கும்.

3

அருள்நெறியின் மூன்றாவது ஒழுக்கம், இறைவழிபாட்டுநெறி உடலுக்குத்தேவை மூச்சுக்காற்று உயிருக்குத்தேவை இறைவழிபாடு இரைப்

மைக்கு தேவை சோறு அகப்பைக்குத்தேவை அருளியல் சிந்தனை. பெண்களிடத்தில் இயல்பாகவே கடவுள் வழிபாட்டு உணர்ச்சி மிகுந்து இருக்கிறது. அதன் காரணமாகவே அவர்களிடத்து நல்லியல்புகளும் பல்கிப் பெருகிக் காணப்பெறுகின்றன. சமயவரலாறுகளைப் பார்த்தாலும் ஆண்மக்கள் தடம்புரண்ட பலசெய்திகளைப் பார்க்கின்றோம். ஆனால் பெண்கள் தாம் தடம்புரளாததோடு, தடம்புரண்டவர்களையும் தகுதிப்படுத்தி அருள் நெறிக்கு ஆற்றுப்படுத்தி இருக்கிறார்கள்.

இந்தச் சிறப்பியல்புகளுக்குத் திலகவதியார், மங்கையர்க்கரசியார் வரலாறுகளை நாம் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இத்தகு பெருமைக்குரிய பண்புக் கூறுபாடுளை இயல்பிலேயே பெற்றிருக்கிற பெண்மைக் குலம் தாய்க்குலம்; சுழன்றடித்துவரும் புதுமைக்காற்றின் பேரால் தடம்புரளாமல் நிலைபெற்றிருப்பார்களானால் அருள் நெறிவளரும். அவர்கள் மனித குலத்தை நேசிக்க அன்பு செலுத்த நமக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஒருவருக்காக ஒருவர் தியாகம் செய்யும் நல்வாழ்க்கையை நமக்குக் காட்ட வேண்டும். குறைவிலா நிறைவாக கோதிலா அமுதாக விளங்கும் திருவருளை வாழ்த்த இன்ப அன்பு கலந்த நல்வாழ்வு வாழ வழிநடத்திச் செல்ல வேண்டும்.

---

## இயம்பினர் ஒருபால்......

சிவபக்தி மாத்திரந்தான் மனிதனைப் பாக்கியவானுக்கும். மற்றையவனைத்தும் பிரயோசனமற்றவை, ஆகையால் இடைவிடாமற் சிவத்தியானம் பண்ணு. ஒன்றுக்கும் பயப்படாதே. வெற்றியுன் சொந்தம். எத்தனைமுறை தவறினாலும் தைரியத்தைக் கைவிடாதே. தவறுதல் சடசம்பந்தமானது. நீயே சித்துப் பொருள் (அதாவது அறிவுப் பொருள்) நீ ஒருநாளும் அழியமாட்டாய். எழுந்திரு! விழித்துக்கொள்! காரியம் கைகூடுமட்டும் வழியிலே தங்கி விடாதே! உற்சாகத்தோடு முன்னேறிச் செல். உனக்குச் சகல சக்தியும் கட்டுப்படுவதைக் காண். வீண்வாத தர்க்கத்திலே நாளைப் போக்காதே. நீ எங்கே போகிறாயோ அங்கே பகவான் உன்னுடன் வருவார்.

— யோகசுவாமிகள்

# இறைவனின் எளிவந்த கருணை

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே"

இதுவே எமது நாளாந்த வழிபாட்டின் பிரார்த்தனையாக அமையவேண்டும். இதுவே சமயங் காட்டும் வாழ்வியல் நெறி. உலகம் தோன்றிய நாள் முதல் மக்களிடையே சமயம் என்ற ஒன்று நிலவி வருகிறது. சமயம் என்பதற்கு நெறி, கொள்கை, மார்க்கம் என்ற பொருள்கள் உண்டு. மனிதன் ஒழுங்கான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு வகுக்கப்பட்டதே சமயம். என்றாலும் இறைவனை முன்வைத்து இல்வாழ்வை மேற்கொள்வதே புனித நிலையை ஏற்படுத்துவதாகும். ஏனென்றால் மனிதன் உணவால் மட்டும் வாழ்பவனல்லன். இறைவன் நினைவாலே வாழவேண்டியவன். நாம் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் இறைவனை நினைக்கவே மாட்டோம். எமக்கு அடிக்கடி சோதனைகள் ஏற்படுவதும் நன்மைக்கே. துன்பங்கள் சுடச்சுட உள்ளம் தெளிவடையும்.

"ஆரொடு நோவேன், ஆர்க் கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலையானால்"

என்று பாடிப்பாடி ஆண்டவனோடு பேசத் தொடங்குவதற்கு எம்மை ஆயத்தப் படுத்துவது துயரம். துயர நிலையிலிருந்து எம்மை தூக்கி எடுப்பது பக்தி. கல்லான மனதையும் கசிந்துருக வைப்பது பக்தி. ஆசையை அடக்கி ஆண்டவன் பால் அன்பைச் செலுத்த வைப்பது பக்தி.

"இரும்புதரு மனத்தேனை ஈர்த்து ஈர்த்து
என்புருக்கி கரும்புதரு சுவை எனக்குக் காட்டினாய்"

என்பது திருவாசகம். இறைவனுடைய எளிவந்த கருணையே கருணை. அந்தக் கருணையே அன்னை வடிவிலும் எம்மை அணைக்கிறது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்பது ஔவையார் வாக்கு. கண் முன் காணப்படுகிற தெய்வமாக இவர்கள் விளங்கினால், கண்முன் காணப்படாத தெய்வமும் ஒன்று இருப்பது புலனாகிறது. எனவே தோன்றாத் துணையாக நின்று எம்மைக் காப்பாற்றும் தெய்வமும் அம்மை அப்பனாகவே நின்று அருள் பாலிக்கிறது. மக்களது தோற்றத்துக்கும், வளர்ச்சிக்கும், மற்றும் எவ்வகையான நலத்துக்கும் அன்னையும் பிதாவும் முதல்வராய் இருப்பது போல, உயிர்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், மற்றும் எவ்வகையான நலத்துக்கும் இறைவனே முதல்வனாக விளங்குகிறான். இறைவனே ஒருவன் என்றாலும், அருள்புரியும் தன்மையால் இரண்டாகிறான். அதாவது கதிரவனும் கதிரும் போல, கதிரவன் ஒருவனே ஒளி கொடுப்பதில் கதிர் முன்னின்று எத்தனையோ மைல்களுக்கு அப்பாற் சென்று சூட்டையும் ஒளியையும் கொடுக்கிறது. எனவே தானும் தனது ஒளியையும் இரு தன்மைப்பட்டு நிற்கும் கதிரவன் போல இறைவனும், தானும் தனது சக்தியும் இருதன்மைப்பட்டு விளங்குகிறான். சக்தியை ஆள்பவன் இறைவன். எனவே "ஆண்" என்ற நிலையிலும் அவன் ஆளுதலின் வழிநிற்கும் சக்தியைப் "பெண்" என்ற நிலையிலும் பேசுவது சமய மரபாயிற்று. ஆளுந்தன்மை யுடையவன் ஆண். பேணுந்தன்மையுடையவள் பெண், ஆனால் ஆளுபவனும் அவன், தன் உயிர்களைப் பேணுபவனும் அவன்தான். எமது வழிபாட்டுக்குக் கொஞ்சம் இணைப்பை ஏற்படுத்துவதற்காக இரு வேறு தன்மையில் காணுகிறோம்.

"அப்பன்நீ அம்மைநீ என்று பாடுவது எமது பாராயணம்
அன்னே! அன்னே! என்னும் சிலசமயம்
நின்னையே ஐயா; ஐயா; என்னவே
அலறிடும் சிலசமயம்"

என்று பாடுவதும், அழுந்தொறும் அணைக்கும் அன்னையாகவும், அறிவிலாது ஆடி, ஓடி விழுந்தொறும் எடுக்கும்

அப்பனுகவும், விளையாடும் போது தோழனுகவும் கருதுவது அருளாளர்கள் மார்க்கமாகும்.

ஒரு நாமம் ஓருருவம் இல்லாதவனுக்கு ஆயிரம் திரு நாமம், திருவுருவம் சமைத்துப் பாடித் தொழுகின்ற வழக்கம் எமக்கு ஏற்படுத்தப்பட்டது. அங்கிங் கெனுதபடி எங்கும் நிறைந்த இறைவனுக்குக் கோயில் கட்டிக் கும்பிடும் மரபும் நம்மால் பேணப்பட்டது. புகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டவனைப் புகழ்ந்து, புகழ்ந்து பாடும் பணியும் எம்மாலேயே மேற்கொள்ளப்பட்டது. ஒரு பெரிய தத்துவ மேதை சங்கரர் சொல்லுகிருர் சுவாமி! மூன்று குற்றங் களுக்காக என்னை நீ மன்னிக்க வேண்டும். உன் மேல் வைத்த அன்பினுலேயே இப்படிச் செய்துவிட்டேன்: முதலாவது உருவமற்ற உனக்கு உருவங் கொடுத்து உறவு முறையும் காட்டி வணங்குகிறேன். இரண்டாவது எங்கும் நிறைந்த உனக்கு ஒரு சிறிய இடத்தைச் சுட்டிக்காட்டி அங்கு எழுந்தருளச் செய்து விட்டேன். மூன்ருவது புகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட உன்னைச் சில வார்த்தைகள் சொல்லிப் புகழலாம் என்று துணிந்து விட்டேன்.

இவ்வாறு மிக நயமாகத் தனது பக்தியையும், இறைவனது ஒப்பற்ற நிலையையுங் காட்டுகிருர் சங்கரர். சிற்றறிவுடையவர்கள் நாங்கள், சம்சார பந்தம் ஒருபுறம், இன்ப துன்பச் சுமை இன்னெருபுறம், மனம் ஒருநிலைப்படாது அலைவது மற்றெரு சங்கடம். இதற்கிடையில் இறைவனையும் வழிபட்டு உய்வடைய வேண்டுமென்ற விருப்பமும் எழுகிறது. என்ன செய்வோம்; இறைவன் தான் இரங்க வேண்டும். அந்த இரக்கமே இறக்கமாகிறது. இறங்கி எம்மை நேசக்கரம் நீட்டி அணைக்க முயல்கிருன். ஆனல் நாங்கள் விடுவித்துக் கொண்டு ஓட முயல்கிறேம்.

"வளர்கின்ற நின் கருணையால் வாங்கவும் நீங்கி
இப்பால் மிளிர்கின்ற என்னை விடுதி கண்டாய்
தனித்துணை நீ நிற்கத் தருக்கித் தலையால் நடந்த
வினைத்துணை யேனை விடுதி கண்டாய்"

என்றெல்லாம் திருவாசகம் செப்புகிறது. எனவே கருணை யின் காரணமாக இறைவன் எடுத்த வடிவங்களே திரு வுருவங்கள். கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவங் கள் அவை. ஆனால் இவ்வுருவங்கள் தான் "இறைவன்" என்று சொல்லிவிட முடியாது. இவ்வுருவங்களினூடே காண வேண்டிய மெய்ப்பொருள் இறைவன். திருக்கோ யில்களில் அமைந்த திருவுருவங்களை "விக்கிரகம்" என்று சொல்வர். வி + கிரகம் என்று பிரிந்து மேலான வீடு என்ற பொருளைத்தரும். அதாவது இறைவன் உறைவதற்கு எமது ஆர்வத்தால் சமைத்த மேலான வீடாகும். எனவே வீடுதான் இறைவனல்ல; வீட்டுக்குள்ளே காணவேண்டிய மெய்ப்பொருளே இறைவன். அதற்கு எத்துணைப் பயிற்சி வேண்டும்.

"மெய்மையாம் உழவைச்செய்து, விருப்பெனும் வித்தை வித்தி
பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே"

இந்தப்பெரு விளைவுக்கு வழிகாட்டுவது வழிபாடு. தாயாம் நிலையில் இறைவனைக் கொண்டுவந்து வழிபடுவது எமக்குக் கொஞ்சம் சுலபமாகிறது. தாயுறவு ஒரு தனித் துவம் வாய்ந்த உறவு. அதற்கு ஈடிணையில்லை. எட்டி உதைக்கிற காலையும் தொட்டு முத்தமிட்டுத் தடவுபவள் தாய். பொல்லாத குழந்தையானாலும் தள்ளாது தாங்கு பவள் தாய். இதனாலேயே "பொல்லாத சேயெனிற் தாய் தள்ளல் நீதியோ" என்று தாயுமானவர் பாடினார். இந்தத் தாயே எம்மை முதலில் அணைத்த தாய். பாலையூட்டி கண்ணை இமை காப்பதுபோல் காத்த தாய்; தான் மருந்துண்டு பத்தியமிருந்த தாய். தந்தை அன்பைவிட சிறந்த அன்பு இந்தத் தாயன்பு. தந்தையின் அன்பு சில சமயங்களில் வன்செயலாகவும் வெளிப்படும். ஆனால் தாயன்பு எந்நே ரமும் இன்செயலாகவே அமையும். ஆனால் இவள் எமது உடம்பைத் தந்த அன்னை; இறைவனே எமது உயிருக்கு உயிராகிய அன்னையாவள். அவனுடைய சக்தியாக நின்று

எல்லா உயிர்களையும் பெருமல் பெற்று வளர்க்கிறது. அந்தச் சக்தியே இறைவனது அருளும், கருணையும், ஆற்றலுமாகும்.

"அருளது சக்தியாகும் அரன் தனக் கருணையன்றித்
தெருள் சிவமில்லை, அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"

என்பது சைவசித்தாந்தம். மலரும் மணமும், நெருப்பும் சூடும், மணியும் ஒலியும் இணைந்த தன்மை போல் சிவ சக்தி ஐக்கியம் உண்டு. சிவம் என்பது அன்பு, மங்கலம், பூரணம் ஆகிய பொருளையுங் கொண்டது. சக்தி என்பது ஆற்றல், அருள், கருணை, ஞானம் என்னும் பொருளை அடக்கியது. அவன் அருளாலே அவன்தாள் வணங்கி என்பதில் வரும் அருள் என்பதே சக்தி. இது ஒன்ருய் இருந்து பலவாய் விரிகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் ஆற்றுகிறது. சூடு என்ற ஒன்று அவித்தல், பொரித்தல், எரித்தல் ஆகியவற்றைச் செய்வது போல் இதுவும் நடைபெறுகிறது. இந்த உண்மையை உணர்ந்து அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைந்த இறைவனை உள்ளத்தே வைத்துப் போற்றுவதும், அவன் புகழைப் பாடிப் பாடி உருகுவதும் பக்திநெறியை வளர்ப்பதாகும்.

"சிந்தனை செய்ய மனமமைத்தேன்; செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யக் கை அமைத்தேன்; கைதொழ அமைத்தேன்
பந்தனை செய்ய அன்பமைத்தேன், மெய்யரும்ப வைத்தேன்
வெந்த வெண்ணீறணி ஈசற்கு இவையான் விதித்தனவே"

பொன்னுலும், பொருளாலும் பூத்துவரும் புகழாலும் இதயச் சுமையை இறக்கிவிட முடியாது. தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தால் மாத்திரம் எந்தச் சுமையையும் இறக்கிவிடலாம். எனவே எல்லாம் வல்ல மெய்ப் பொருளாக விளங்குகின்ற இறைவனை அல்லும் பகலும் வழிபட்டு அமைதியடைவோமாக.

அகரமுதல எழுத்தெல்லாம்

ஆலய மணியாகி எழுகவே!

**உமா டிரேடிங் சென்ரர்**

Uma Trading Centre,


57, Fourth Cross Street

COLOMBO-11

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

# ஆலயமணி

படிப்பது வாழ்வுக்கு நல்லது



# VENUS ENTERPRISES

General Merchants & Rice Agents

24, 4th Cross Street,

COLOMBO-11

## நாமவர்க்கே.........

நாகேசு — தர்மலிங்கம்

கடவுள் இருக்கிறாரா இல்லையா?
இது காலம் கடந்த விவாதம்
புதிதாக ஏதாவது கதைக்க வருபவர்கள்
போடும் புதிர்தான் இந்த இல்லை என்ற கூவல்
இவர்களுக்குத் தோள் கொடுப்பவர்கள்
இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள்
மதம் அபின் என்றவரின் வழித்தோன்றல்கள்
பெரியார் விட்டுச்சென்ற இறை விரோதிகள்
என்ன எதுவானாலும் உண்மை இருப்பது
உண்மை என்று உத்தமர்கள் பலர்
உணர்ந்து உரைத்துள்ளார்கள்
விஞ்ஞானத்தையும் விஞ்சிய இவ்வுண்மையை
மெய்ஞ்ஞானம் ஒன்றே தெளிந்து கூறிவிடும்
மெய்ஞ்ஞானம் எது? கடவுளை எப்படி அறிவது?
நான் பெரியவனாகி பணம் சேர்க்க வேண்டும்
என் பிள்ளை படித்து பட்டம் பெறவேண்டும்
சகல வசதியும் என் குடும்பம் பெற்று
சமூகத்தில் நான் புகழ் பெறவேண்டும்
நோயும் நொடியும் நீங்கி என் வாழ்வு
சீரும் சிறப்பும் பெற வேண்டும்
என்று கடவுளிடம் கேட்டு
எங்கள் தேவையில் நிறைவு பெற்றிட
இறைவனை வளைத்து எம் வயமாக்கி
எல்லாம் வல்லோனிடம் ஏவல் தருகிறோம்
இந்தப் பரம் பொருள் எமக்கு ஏவிய
அறம் செய், சினம் தவிர், இரக்கம் கொள்
அடுத்தவனை உன்னைப் போல் நேசி
ஐயம் இட்டு உண்
பஞ்சமா பாதகத்தை அடியோடு விடு
என்பனவற்றைச் சிறிதளவேனும்
சிந்தனை கொண்டோமா?
எம்மை ஆட்கொள்ள இறைவன்
தந்த ஏவல்கள் அல்லவா இவைகள்
நம்மை முன்னிறுத்தி நமது தேவைக்காய்
அவனை ஆட்கொள்ள நாம் முயல்கிறோம்
முன்னவர்கள் முனிவர்கள், ஞானிகள், பெரியவர்கள்
சொல்லிய வேதங்களை உண்மையுடன் மீட்டு
வல்ல பரம்பொருள் எம்மை ஆட்கொள்ள
அவனருளாலே அவன்தாள் பணிவோம்.

# சமயத்தின் பேருண்மை

— கனகசபாபதி நாகேஸ்வரன் B. A. (Hons)

சமயஞ்சார்ந்த ஞான அறிவு ஒவ்வொருவருக்கும் அவசியமான தொன்றும். சைவத்துறையென்பது அவரவர் அறிந்த நெறியிலே ஒழுகுவதென்பதும், ஆன்ம முன்னேற்றத்தினது, அறிவார்ந்த நிலையில் அமைவது, தத்துவார்த்த விளக்கத்தினால் அறிந்து ஒழுகுவது என்று பலவகைகளிலமைந்து காணப்படுகிறது. தத்துவங்கள் சமயத்திற்கு அவசியமானவையென்பது அறிஞர்களது கருத்தாகும். ஆனால் சமயமென்பது அவரவரது அன்பு நிலையினாலேயே வெளிப்படுத்தப்படுவது என்ற இருவேறு கருத்துக்கள் நமது சைவசமய வளர்ச்சி வரலாற்றிலேயும் காணப்படுகின்றது. இத்தகு கருத்துக்கள், நமது சைவத்தின் தத்துவ வளர்ச்சிக்கும், நடைமுறை வளர்ச்சிக்கும் பெரிதுந் துணை செய்வன வாயமைந்து காணப்படுகின்றன.

சமயம் என்பது முன்னோர் வழியே பின்பற்றப்படுவது என்ற கருத்துமுண்டு. அது பெரும்பாலும் உண்மையானதாயும் ஏற்புடைமை கொண்டதாயும் அமைகின்றது. ஆயினும் பின்பற்றல் வெறும் செய்கையாகவும், செயற்கையாகவும் அமைந்துவிடக் கூடாதென்பதிலேயும் சைவசமயம் நிரம்பிய கண்ணுங் கருத்துங் கொண்டிருந்துள்ளதென்பது அதனது வரலாற்று வளர்ச்சியிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது: கடவுள் பற்றிய எண்ணம், கடவுளுக்குக் கொடுக்கப்பட்ட வடிவம், குணவியல்புகள், செயற்பாடுகளென்பனவும் சைவ தத்துவத்திலே பரக்க விளக்கப்படுகிறது. 'தானே வந்து ஆட்கொள்ளும்' நிலையிலே கடவுளைச் சிலர் கண்டுள்ளனர் என்பதற்கு ஆதாரங்களுள. அது உயர்ஞானம்; சிறந்த மெய்நெறி; பக்தி முதிர்ச்சியின் ஞானத்து நெறி நின்றதன் பேறு, இந்த மெய்ஞ்ஞான உணர்வு உலகிலே எல்லோருக்கும் எளிதிலே வாய்க்கப் பெறுவதில்லை. அப்பரடிகள் இதனையே, 'ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்' எனக் குறிப்பிட்டார். இது மேலுஞ் சிந்தித்தற்குரியது.

'ஞானங் குறைந்தவர்கள்' என்னுமொரு பிரிவினர் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற பிரிவிலே அடங்கியுள்ளனரென்ற கருத்தினை இங்கு கவனத்திற் கெடுத்துக்கொள்ளுவது மிகவும் அவசியமானதொன்றும். மலபந்தங்கள் காரணமாகவே ஆன்மா தனது நிலையினின்றும் இழிந்து காணப்படுகின்றதென்ற கருத்து சைவசித்தாந்த வித்தகர்களால் முன் வைக்கப்படுவதுண்டு. உலகிலே தோன்றியவுயிர்

கள் யாவும் ஒத்த அறிவு, ஒத்த இயல்பு, ஒத்த உணர்வு கொண்டன வல்ல. விஞ்ஞானமும் இதனை ஒப்புக்கொள்ளுகின்றது. 'நாய்க்குணம் படைத்த ஆன்மாவெனத் தன்னை இழித்துப் பழித்துத் தாழ்த்திப் பேசுகின்றார் மணிவாசகப்பெருமான். அத்தகு 'நாயிற் கடைப்பட்ட நாயேனை நயந்துநீ ஆட்கொண்ட' பரங்கருணையைத் திருவாசகமெங் கணுமே பரக்கக் காணலாம்.

பார்த்தனுக்குப் பாசுபதாஸ்திரங் கொடுத்த பரமன் பன்றிக் குட்டிக்குப் பால் கொடுக்கும் 'தாயாகும் தத்துவத்தை'யே சைவத்தின் மகோன்னதம் என்று கூறுதலே தகும். இதனை இக்காலச் சைவசமயத் தினர் உற்றுணர்ந்து கொள்ளுதல் அவர்தங் கடன். கைலையங்கிரி வாசன் குருந்தமர நீழலிலேயும் எழுந்தருளி விளக்கங்கொடுத்துத் தம்மை யாரெனவுணர்த்தவைக்கும் பான்மை சைவத்தின் இன்னொரு மகோன்னதம். முனிசிரேஷ்டர்களுக்கு அறமுரைத்தருளிய செயல் — உபதேசஞ்செய்த குருவடிவத் தோற்றம் பிறிதொரு மகோன்னதம். 'குரு' – சீஷ்யத் தொடர்பில் வளர்ந்தது சைவம்; குருவே நற்சீடனைக் கூப்பிட்டு ஆட்கொள்ளும் தன்மையில் விளங்குவது சைவம். 'ஞான குரு' மூர்த்தம் மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்து – உண்மையறிவை நல்கி ஆன்மாவைப் பரிபக்குவப்படுத்தும் நிலையில் எழுந்தருளப் பெறுவது. முருகப் பெருமானைக் "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்று கூவியழைக்கின்றார் அருணகிரிநாதப் பெருமான். 'சிவம்', 'ஞானம்', 'போதம்' மூன்றையும் உலகுக்குணர்த்தியது சிவபெருமானின் தட்சிணா மூர்த்தி வடிவம்; அவன் தென்முகக்கடவுள்; பேரறிவாளன்; தூய வுடம்பினன்; வரம்பிலாற்றலுடையவன்; முடிவிலி; 'ஆதி அந்தமில்லாத அரும்பெருஞ்சோதி' அவன் அறிவுச்சுடர்; செந்தழல் புரைதிருமேனி யான்.

இனி, இறைவன் ஏன் தானேவந்து தன்வயப்படுத்தல் வேண்டும் என்று வினவுவோர் உளர். இவ்வினா உலக இயல்பினையறியாதார் வினாவும் வினாவாகவும், உண்மையிலே விளங்காத் தனத்தினாலெழுந் பட்டதாயும் அமையலாம். எது எவ்வாறாயினும் விளக்குவது அவசிய மாகின்றது. தத்துவமும், கோட்பாடும் எளிமைப்படுத்தப்பட்டு விளக்க மளிக்கப்படும்போது அவை கேட்போரது உணர்வில் புதிய – அரிய பல விளக்கங்களைத் தந்துவிடுவதுண்டு. இன்னும் முற்றிலும் புரியாததொரு கருத்தினை – புதிரை விளங்கப்படுத்தியுரைப்பதாகவும் முடியும். எனவே உலகினையும், உயிர்களையும் தோற்றுவித்தவனை இறைவன் – மூலப் பரம்பொருள் தாம் இயற்றியவை பற்றிக் கூறும்போது அப்படைப் பினுக்கான காரணம் – காரியம் என்பன எளிதிலே விளக்கம் பெற்று விடுகின்றன. 'வேறொருவர் வேண்டாதநிலை' குருவினது – இறைவனது திருப்பெரு வடிவங்களிலே காணக்கிடக்கின்றது. சுந்தரரைக் கிழப்

பிராமணவடிவத்திலே தானேவந்து ஆட்கொண்டார் பரமசிவனார். அடியார் வரலாறு கிளர்த்தும் பெரியபுராணம் முழுவதும் இந் நயப் புண்டு. வாழ்வின் குறிக்கோள் பரமனைக் காண்பதென்ற நோக்குடை யது சைவம். முத்தி என்ற கோட்பாடு உயிர் இறைவன் ஐக்கியத் தையே உணர்த்தி நிற்கின்றது. 'தாடலை' பிரசித்தமானது.

வள்ளுவர் பெருமானும் 'மெய்ப்பொருள் காண்பதறிவு' என்றார். வாய்வழிக் கேள்வி ஞானம் – மெய்ஞ்ஞானம் பெறுதற்கு உதவுவது. இறைவன் கீழிறங்கி வந்து உபதேசிப்பது, கேட்போனாகிய சீவனுக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துதலேயாம். அவ்வாறு போதித்து ஞான விளக்கத்தையும், ஞானவொடுக்கத்தையும் அருளுவதே இறைவன் உருவெடுப்பதன் நோக்கமெனவுரைப்பது சைவசமயம். அருவம், உரு வம், அருவுருவம் என்னும் பேதங்கள் காட்டி ஏதங்களறுத்தெமை யாண்டருள்புரிபவன் ஈஸ்வரன். எனவே கனவிலும் நனவிலும் பார்க்கு மிடமெங்ஙனும் நீக்கமற நிறைகின்றவன் பரிபூரணானந்தன். அவனைக் காணக் கண் ஆயிரம் வேண்டும். அவன் ஞானக் கண்ணினால் நம்மை யாட்கொள்ள வந்த வள்ளல் என்று சிந்தித்தல் வேண்டும்.

"பார்வையென மாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணார் புவி"

என்று பேசுகின்றது திருவருட்பயன். மாயா மறைப்பினால் கட்டுண்டு கிடக்கும் ஆன்மா அம்மறைப்புத் திருவருளாகிய மருந்தினால் அகலி ஒளிமயம் பெற்றுய்தியடைகின்றதென்ற தத்துவார்த்த உண்மையை உலகெங்கும் உரைப்பது சைவசித்தாந்தம். அதனையே சைவம் செய் கின்றது. சைவர்கள் எதையுமே செய்பவர்களல்லர். 'ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே' என்பது சைவத்தின் பேருண்மை. எனவே தெய்வம் உண்டென்றிரு. 'வேண்டத்தக்கதறிவோய் நீ' திருவருள் நிலவி நின்றதுலகெலாம்.

---

சிறுகதை

# அழைப்பு

சொக்கன்

"இந்திய அமைதிப்படை எல்லாரையும் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குப் போகட்டாம். கெதியாய் வெளிக்கிடுங்கோ".

கதிரைவேற்பிள்ளை இந்தச் செய்தியைச் சொன்னபோது அவருடைய முகம் சாவெடில் அடித்ததுபோலக் காட்சி அளித்தது. அவரது உடல் அவரை அறியாமலே கிடுகிடுவென்று நடுங்கியது. கண்களிலே அளவிடமுடியாத பீதி! "எங்கையிருந்தாலும் நடப்பது நடந்துதான் திரும். அண்டைக்கு எழுதின விதியை அழிச்செழுத ஏலுமே? என்ன வந்தாலும் ஒண்டாய் அநுபவிப்பம்" என்று காலையிலே சொல்லிவிட்டு வெளியே சென்ற கதிரைவேற்பிள்ளை வேறு. இப்பொழுது இப்படிச் சொல்லும் கதிரைவேற்பிள்ளை வேறு.

அவர் சொன்னதை நிரூபிப்பதுபோல வானத்தை மூடிக்கொண்டு ஹெலிகளும் விமானங்களும் பெரிய இரைச்சலோடு பறந்துகொண்டிருந்தன. இருந்திருந்து 'ஷெல்'களின் இடிமுழக்கம் காதுகளைச் செவிடுபடுத்தியது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஆயுட்காலம் நிமிஷங்களாகக் குறுகிக் கொண்டிருக்கிறதோ?

"அப்பவே சொன்னன். அயல்அட்டையிலை இருந்ததுகளெல்லாம் போட்டது போட்டபடி ஓடிப்போகேக்கை வீராதி வீரன் போலை வீறுப்புப் பேசிஞய் இப்ப...?" என்று பிள்ளையின் தாய் தனது தீர்க்க தரிசனத்தைப் பிரகடனப்படுத்திய பொழுது, அவளின் அசந்தர்ப்பப் பேச்சு, பிள்ளையின் நெஞ்சை நெருடியது. அவருக்கு எரிச்சல் எல்லை கடந்தது. "அம்மா! சும்மா விழல்கதை கதையாமல் கெதியாய் வெளிக்கிடுங்கோ" பிள்ளையின் அதட்டலான பேச்சு அம்மாவை மட்டுமல்ல, அவரின் மனைவியையும் குமர்ப்பிள்ளைகள் மூவரையும் பரபரப்படையச் செய்தது.

மத்தியான நேரம். சமையல் எல்லாம் அரைகுறை. அடுப்பில் சோறு வெந்து 'களகள' ஒலியை எழுப்பியது. இரண்டு கறிகளும் குழம்பும் ஏற்கனவே தயாராகி விட்டன. ஆனல் பிள்ளையின் அவசரமும் பதற்றமும் அவரது குடும்ப அங்கத்தவர்களையும் தொற்றிக் கொள்ள, அவர்கள் கைக்குக் கிடைத்த உடுப்புக்களைப் பெட்டிகளில் திணிப்பதும் கதவுகளைப் பூட்டிச் சாவிகளை எடுப்பதுமாய் எவ்வளவு

விரைவாக ஆயத்தமாக முடியுமோ அவ்வளவு விரைவாக ஆயத்தமா கினர். மனைவி நகைநட்டுக்களையும், பெட்டியுள்ளே மறைத்து வைத் திருந்த பணப்பையையும் எடுத்து மார்புச் சட்டைக்குள்ளே செருகிக் கொண்டு ஆயத்தமாகி விட்டாள்.

எல்லாருக்கும் முன்னால் தனது ஓரிருசேலைகளைப் பொட்டளியாகக் கட்டிக்கொண்டு பிள்ளையின் அம்மா 'றெடி'யாகி வாசல் கேட்டை அடைந்து விட்டாள்.

அப்பொழுதுதான் கதிரைவேற்பிள்ளை கேட்டார் "அப்புவை என்ன செய்யிறது" மற்றவர்கள் பதிலளிக்க முன்னமே அப்பு தமது கொட்டிலில் இருந்தபடி பதில் கொடுத்தார் "என்னைப்பற்றி யோசிக் கவேண்டாம். நீங்கள் தப்பி ஓட்டித் திரும்பி வந்தால் போதும். போயிட்டு வாங்கோ"

அந்த வார்த்தைகள் புறப்பட்டவர்களுக்குப் பெரும் ஆறுதலை அளித்தன. அப்புவுக்கு வயது எண்பதைக் கடந்துவிட்டது. நடையி லும் சொல்லிலும் தளர்ச்சி ஏற்பட்டு நாளின் பெரும் பகுதியைப் படுக்கையிலேயே கழித்துக்கொண்டிருப்பவர். ஆனாலும் மகா பிடிவா தக்காரர்! தாம் நினைத்ததையே செய்வார். அவரோடு விவாதம் செய்யவோ, அழைத்துச் செல்லவோ அவர்களுக்கு இயலாது என்பது மட்டுமல்ல, அதற்கு வேண்டிய நேர அவகாசமும் அவர்களுக்கு இல்லை.

பிள்ளையின் தாய், அப்புவோடு ஐம்பத்தைந்து வருடங்கள் இல் வாழ்க்கையைப் பகிர்ந்துகொண்டவள் மட்டும் சிறிது தயங்கி, அப்பு இருந்த கொட்டிலுக்குள் நுழைந்தாள்.

"பிள்ளையள் போகட்டும் நானும் நீங்களும் மெல்ல மெல்ல நடந்து அவைக்குப் பின்னாலை போவம் வாறியளே"?

அப்பு சிரித்தார் "நீ போ, பிள்ளையளுக்கு உதவியாயும் ஆறுதலா யும் இருக்கும். நான் வந்தால் எல்லாருக்கும் அவஸ்தைதான். வீட் டைப் பாக்கிறதுக்கும் ஒரு ஆள் தேவைதானே? எல்லாரும் போயிட்டு வாருங்கோ. தப்பிப்பிழைச்சால் உங்களின்ரை முகத்திலை முழிக்கலாந் தானே?" அம்மாவுக்கு விம்மல் பொருமலுடன் அழுகை வந்தது. ஆனால் கணவர் சொல்வதும் நியாயமாகவே பட்டது.

மகன், மருமகள் பேரப்பிள்ளைகளுடன் ஒழுங்கையில் இறங்கி அவள் இடுகிடு வென்று நடக்கத் தொடங்கினாள். அப்பு பெரிய கமக்காரன். அவர் அப்புவாகவே அவதாரம் எடுக்கவில்லை. கந்தப்பசேகரம் என்ற

பெயரோடு பிறந்து, எல்லாரையும் போலவே வளர்ந்து, இளமைத் திருவிளையாடல்கள் பலவற்றில் ஈடுபட்டு, 'சண்டியன் கந்தன்' என்ற பட்டப் பெயரைத் தமக்கு உரித்தாக்கி, ஊரே நடுநடுங்க வாழ்ந்து, பொன்னம்மாவை மனைவியாக்கி, காலகதியில் அவளை ஐந்து பிள்ளைகளுக்குத் தாயாக்கி, அந்தப் பிள்ளைகளையெல்லாம் வளர்த்தெடுத்து, உரிய காலத்தில் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் செய்து முடிக்க அவர் தவறவில்லை.

ஆனால் அவர் கடவுளைப் போலக் காலாதீதர் – காலங் கடந்தவர் – அல்லர். சண்டித்தனங்களெல்லாம் அவரது நாற்பது வயதிலேயே அவரைவிட்டுக் குடிபோய் விட்டன. பாட்டுவண்டிச் சவாரியும், கள்ளுக் கொட்டில் வாசமும், திருவிழா உபயங்களும், ஊர் நாட்டாண்மையும் முன்பே கைதவறிப் போய்விட்டன.

பற்றுநிறைந்த கணவர், பொறுப்புள்ள தந்தை, பாசமுள்ள பேரர் என்ற தரங்களையெல்லாம் கட்டிக் காத்து இன்று அவற்றையும் கடந்து நரை திரை மூப்புக்களோடு, 'என்று வருவன் எமனென்று எதிர்நோக்கி நின்று தளர்கின்ற' கிழவராக, பழசாக, C 90 ஆக அவர் ஆகிவிட்டார்.

அவர் யாருக்கும் துணையல்லர். அவருக்கும் அவரது பொல்லைத் தவிர – மனைவி உட்பட – எவரும் துணையல்லர்!

அப்புவின் வாய் முணு முணுக்கிறது. "ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல——"

ஒரு காலத்தில் அவர் ஆடாத வழக்குகள் இல்லை. தமது காணி எல்லையைக் கடந்து வேலி போட்டதற்காக, அடுத்தவீட்டு அப்புத்துரையின் தலையை மண்வெட்டியால் பதம்பார்த்து, அதன் காரணமாக ஐந்து வருடக் கடுழியச் சிறைவாசம் அனுபவித்த மகாவீரர் அவர்! கதிரைவேற்பிள்ளைக்குத் தருவதாகச் சொன்ன சீதனப்பணத்தில் ஆயிரம் ரூபா குறைகிறது என்று கலியாணத்தையே குழப்பி, அடுத்த முகூர்த்தத்திலேயே மேலும் அதிக சீதனத்தோடு கலியாணம் செய்து வைத்த விடாக்கண்டர்! அன்றைக்கு, 'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க' வீட்டினுள் அடியெடுத்து வைத்த கதிரைவேற்பிள்ளையின் மனையாட்டிதான், இன்று அடிக்கடி 'ஷெல்' லடிபோலச் சொல்லடிகளால் அவரை வருத்திக் கொண்டிருக்கிறாள்!

மனைவி பொன்னம்மாமட்டும் என்ன குறைச்சல்? "வாக்குமாறி வயசுபோன காலத்திலை தாறதைத் தின்டிட்டு மூலையிலை 'சிவனே' என்டு கிடக்காமல் எந்தநேரமும் புறணியளப்பு. இது ஏன் இன்னம் கவிண்டு போகாமல் கிடந்து இளசுகளின்ரை உயிரை எடுக்குது? சனி

யன்!'' – பொன்னம்மாவின் மந்திரம் போன்ற சொல்லின்பத்தில் ஓர் அமுதத்துளி இது!

கதிரைவேற்பிள்ளை தகப்பனுடன் கதைப்பதே இல்லை. பேர்த்திகளுக்கு அப்பு என்றால் பெரிய இளக்காரம்!

இந்தநிலையில் ஒருசில நாள்களாவது அவர்களிடமிருந்து விடுதலை பெற்று, அவர்களுக்குத் தாமும் விடுதலை அளித்து நிம்மதியாக இருக்கக் கிடைத்ததையிட்டு அவர் அடைந்த மனநிறைவுக்கு அளவேயில்லை.

ஹெலியும், விமானங்களும், ஷெல்சத்தங்களும், கண்ணிவெடி ஓசைகளும் அவரின் மனஅமைதியைக் குலைக்கச் சக்தியற்றுப் போயின.

''நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கோயில் போலவே இருக்கு'' வெளிவீதியெல்லாம் பொதுமலகூடங்களாய்ப் போச்சு. ஆண் பெண் கூச்சம் எல்லாம் காத்திலை பறந்திட்டுது கோயிலுக்கை சட்டைகளும் செருப்புக்களும் தாராளமாய் நடமாடுது. நண்டுக்கறி சோறையும் முட்டைப்பொரியலையும் சனங்கள் கோயிலுக்குள்ளையே வைச்சுச் சாப்பிடுதுகள் வாந்தி பேதி உபத்திரவம் வேறை. அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கும் அங்கை தட்டுப்பாடு. விசுக்கோத்துக்கூட ஆனைவிலை குதிரைவிலை! அது ஒரு நரகம் அங்கை ஆர் போறது? எப்பிடிக் காலம் தள்ளுறது? சும்மாய் கிடவுங்கோ. நடக்கிறது நடக்கட்டும்'' என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்த அவரின் மகனும் ஓய்வுபெற்ற அதிபருமான கதிரைவேற்பிள்ளை அவர்களே, இன்று தமது குடும்பத்தோடு அங்கே போகிறார். அகதிகளின் கூட்டத்தில் ஆறுபேரின் தொகை அதிகரிப்பு!

உயிர் ஆசைதான் எத்தகையது!

கந்தப்பசேகரம் என்ற கந்தப்பர் அல்லது கந்தர்(ன்) மனம், என்றும் இல்லாத வகையில் தெளிவாகச் சிந்திக்கத் தொடங்கி இருந்தது. ''நான் யார், என் உள்ளம் யார், ஞானங்கள் யார்,'' என்ற கேள்விகள் அவர் சிந்தையில் அலையலையாக எழுந்தன. குசினி ஈருகப் பூட்டிவிட்டுத் தங்கள் உயிரைக் காப்பது ஒன்றே குறியாகச் சென்ற மனைவி, மகன், மருமகள், பேர்த்திகள் ''அப்பு சாப்பாட்டுக்கு என்ன செய்வாரோ?''என்று யோசிக்கவில்லையே என்று தொடக்கத்தில் அவர் மறுகியது உண்மைதான் ஆனால் அன்று பின்னேரம் பக்கத்துவீட்டு அப்புத்துரை அவரைத் தேடிவந்து ஒரு கலயத்திலே கஞ்சியைக் கொடுத்ததோடு அந்த மறுகலுக்கும் அவர் பிரியாவிடை அளித்துவிட்டார். அப்புத்துரை வேறு யாரும் அல்லர்! 'சண்டியன் கந்தனுய்க்' கந்தப்பர் இருந்தகாலத்தில் அவரது மண்வெட்டிக்குத்தலையைக்குனிந்துகொடுத்து தலையோடு வந்ததை மயிரிழையில் தடுத்து உயிர் பிழைத்தவர்,

அவருடைய வீட்டிலும் எல்லோரும் நல்லூர்க் கந்தசாமி கோயி லுக்குச் சென்றுவிட, அவர்மட்டும் வீட்டுக்குக் காவற் பிராணியாக மாறிக் கந்தப்பர் போல இருந்து வருபவர்தாம்!

கந்தப்பர் கஞ்சியைக் குடித்தபடி தம் வீட்டாரின் நன்றி கெட்ட செயலை ஒருபாட்டம் கொட்டித் தீர்த்தார். ஆனால் அப்புத்துரையோ சற்றும் அசையவில்லை. "இங்கை பார் கந்தர்! எங்கடை காலம் இன் னும் ஒருமாதமோ, ஒருவருசமோ? நாங்கள் எங்கடை காலத்திலை அநுபவிக்கவேண்டியதை எல்லாம் அநுபவிச்சுத் தீர்த்திட்டம். இனி எங்களுக்கென்ன? எங்கடை பேரைச் சொல்லிக் கொண்டு எங்கடை பரம்பரையாவது இந்த மண்ணிலை உரிமையோட வாழட்டும். அதுகளை நோகிறது பெரும் பாவம்" என்று அப்புத்துரை சொன்ன அந்தக் கணத்திலிருந்து ........

கந்தப்பர் முற்றிலும் புதிய மனிதராகி விட்டார். அப்புத்துரை கேட்டுக்கொண்டபடி வளவுப் பொட்டுக்குள்ளால் நுழைந்து, அவர் அப்புத்துரை வீட்டிலேயே சென்று இருக்கத் தொடங்கினர்.

அங்கே, அப்புத்துரையும் கந்தப்பரும், அப்புத்துரையின் 'பொன் னம்பலம்' என்ற நாய், கொட்டிலில் கட்டப்பட்டு 'ஷெல்' அடிச்சத் தம் கேட்கும் ஒவ்வொரு சமயத்திலும் துள்ளி மிரண்ட நிறைமாதக் கன்றுத்தாய்ச்சியான பசு ஆகியவற்றோடு புதியதொரு வாழ்வைத் தொடங்கினர்.

இருவரும் காலையில் எழுந்திருப்பார்கள்; காலைக்கடன்களை முடித் துக்கொண்டு தங்கள் துணிமணிகளைத் துவைத்து உலர்த்தி; ஸ்நானம் செய்வார்கள். பின்பு அங்குள்ள சாமிபடத்துக்கு முன்பு விளக்கேற்றித் தேவார திருவாசகங்களை உருக்கமாகப் பாடுவார்கள். அப்புத்துரைக் குப் புராணபடன அநுபவம் இருந்தது. கந்தப்பருக்கும் ஓரளவு கேள்வி ஞானம் உண்டு. இருவரும் கந்தபுராணத்தை உற்பத்திகாண்டத்தி லிருந்து நாள்தோறும் நூறு நூறு பாடல்களாகப் படித்து உரைசொல்லி மகிழ்ந்தார்கள்; புதியதொரு பத்தி அநுபவத்தில் திளைத்தார்கள்.

அதுநாள்வரை தமது இளைய பரம்பரையினர் அநுபவித்துவரும் துன்பங்களை நினைத்து நினைத்து ஏக்கப் பெருமூச்சும், மௌனக் கண்ணீ ரும் விட்டுத் தனிமையிலே குமைந்து வந்த உணர்வுகள் கந்தப்பரை விடுத்து மெல்ல மெல்ல அகன்று போயின.

"சூரபன்மனிடமும் அவன் உடன்பிறப்புக்களிடமும், படைகுடி பரிவாரங்களிடமும் தேவர்கள் பட்ட அல்லல்களிலும் அதிகமாகவா நாங்களும் எங்கள் சந்ததியும் படுகிறோம்? முருகப் பெருமானின் ஞான

வேலினால் தேவர்கள் துயர் களையப்பட்டது போல அவன் அருளாலே எங்களுக்கும் விடிவுகாலம் ஏற்படாமலா போகப் போகிறது? அந்த விடிவின் பொழுது நாங்கள் இந்த உலகில் இல்லாமல் போய்விடலாம். ஆனால் எமது சந்ததியினர் நிச்சயம் அமைதியும் இன்பமும் நிறைந்த வாழ்க்கையை நடத்தாமல் போகார்கள்'' என்ற மனத்திடம் கந்தப்பருக்குப் படிப்படியாக ஏற்பட்டு வந்தது.

அவருக்கு இப்பொழுது யாரிலும் வெறுப்புக் கிடையாது. ஒரு கிழமைக்கு முன்வரை பேச்சுப் பறைச்சலின்றி ஒருவரைக் கண்டால் மற்றவர் மறுபக்கமாக முகத்தைத் திருப்பிச்சென்ற அவரும் அப்புத்துரையும் இப்பொழுது உயிரொன்றிய நண்பர்களாகி விட்டார்கள்.

அப்புத்துரை நண்பனா? இல்லை! இவன் என் குரு. நாங்கள் இருவரும் ஒன்றாய்ப் படித்த காலத்தில் 'மொக்கன் அப்புத்துரை' என்று பெயரெடுத்த இவனா இப்பொழுது இத்தனை ஞானம் பேசுகிறான்?

அப்புத்துரை ஒருநாள் சொன்னார் 'கந்தர் நான் பகவத்கீதை படிச்சிருக்கிறன். அருச்சுனன் குருசேத்திரப் போர்க்களத்திலை வீட்டுமர் முதலான தன்ரை உறவினரைக் கண்டவேளையிலை ''இவையோடை நான் எப்பிடிப் போராடுறது? இவையைக் கொண்டுதான் நாட்டை அடையவேண்டுமெண்டால் அந்த நாடு எனக்கு வேண்டாம். நான் காட்டிலை போய் இலைகுழையைத் திண்டு தவம் செய்யப் போறன்'' எண்டு வெளிக்கிட்டானாம். அந்தவேளையில் அவனுக்குத் தேர்ச்சாரதியாயிருந்த கிட்டிணர் என்ன சொன்னாராம் தெரியுமே? ''மடையா உன்ரை சொந்தக்காரர் எண்டு நீ நினைக்கிறதெல்லாம் உவையின்ரை உடலைத்தான். உயிரை அல்ல. உயிர் அணிஞ்சு கொள்ளுற சட்டைதான் உந்த உடலுகள். ஒரு உடல் போனால் இன்னொரு உடல். ஒரு பிறவி போனால் இன்னொரு பிறவி. உன்னாலை ஒருதன்ரை உயிரை – ஆன்மாவைக் கொல்ல ஏலாதடா. நீ இராசா உன்ரை கடமை போர்செய்யிறது உன் மூலமாய்த் தருமத்தைக் காக்கிறது என்ரை கடன் ஆனபடியால் உந்த மயக்கத்தை விட்டிட்டு ஒரு இராசா செய்யவேண்டிய தருமத்தை – கடமையை – போரை, நீ செய் ''இதுதான் கிட்டிணர் சொன்னது. நாங்கள் இதுவரை எத்தினை பிறப்பெடுத்திருப்பம்? எங்களுக்குத்தான் எத்தனை தாய்; தகப்பன்! யோசிச்சுப்பார். இது ஒரு நாடகம் அப்பா! அஞ்ஞானந்தான் இந்த நாடகத்துக்கு ஆதிமூலம்'' பேசாமல் இருக்கிற இன்னும் கொஞ்சநாளைக்கு ''அப்பு, சாமி, எங்கடை இனத்தைக் காப்பாற்று'' எண்டு மண்டாடிவிட்டுப் போறவழியைப் பாப்பம்!

இதற்குப் பிறகும் மாயபந்தங்களில் கட்டுண்டு கிடக்க அவ்வளவு மடையரா கந்தப்பர்?

அப்புத்துரை, கந்தப்பர் இருவரது முகங்களிலும் முன் எப்பொழுதும் இல்லாத ஒரு மலர்ச்சி வளவில் நின்ற தூதுவளை, குறிஞ்சா முருங்கை, முல்லை, முசுட்டை இலைகளைப் பிடுங்கி அரிசியோடு வேக வைத்து கொஞ்சம் உப்பும் புளியும் சேர்த்து ஒருநேரக் கஞ்சியாக்கி இருவரும் குடித்துவிட்டு வீதிகளிலே உல்லாசமாகத் திரிந்தார்கள்.

"என்ன அப்புமாரே! உங்களுக்கு விசரே? உயிரை வெறுத்துத் தெருக்களிலை திரியிறியள்! பேசாமல் நல்லூரிலை போய் அங்கினைக்கை கிடவுங்கோ" என்று வீதிகளிலே ஆசை அருமையாகக் காணப்பட்ட இளசும், நடுவயதும் புத்திசொன்னார்கள். கிழவர்களோ கலகல என்று சிரித்துவிட்டுத் தம் போக்கிலே சென்றார்கள்.

அந்த வேளைகளிலே, அப்புத்துரை

"நந்தவ னத்திலோர் ஆண்டி — அவன்
நாலாறு மாசமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தான்ஒரு தோண்டி — அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

என்றும்,

மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி"

என்றும்

எத்தாயர்? எத்தந்தை? எச்சுற்றத்தார்?
எம்மாடு சும்மாடாம்? ஏவர் நல்லார்?
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை
சிறு விறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்.

என்றும் உரத்துப் பாடிக் கூத்தாடிக் தமக்கு அறிவுரை பகர்ந்தவர்கள் முன் தம்மை ஒரு கேலிப்பொருளாகக் பைத்தியகாரனாகக் காட்டத் தவறவில்லை. "பேயொன்றும் தன்மை பிறந்துவிட்டவரும் பிறந்து கொண்டிருப்பவரும்" தம்மைப்பார்த்துச் சிரித்தவர்களைத் தாம் பார்த்துச் சிரிக்கத் தொடங்கிய பொழுது... ..

எல்லாம் குறைப்பிரசவ நிலை......

ஆனால்......

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மட்டும் பழையபடி கோயில் ஆகக்கூடிய சூழ்நிலை உருவானது, அவன் அருள் என்றுதான் கூறவேண்டும்.

கந்தப்பர் குடும்பமும், அப்புத்துரை குடும்பமும் சரியாக ஒரு மாதத்திற்குப்பிறகு தங்கள் மூட்டை முடிச்சுக்களோடு வீடுகளுக்குத் திரும்பிய வேளையில்...அப்புத்துரை வீட்டு முற்றத்தில்......

மாஜி அப்புத்துரையினதும் முன்னாள் கந்தப்பசேகரத்தினதும் உடற்சட்டைகளின் எஞ்சிய பாகங்கள் எலும்புக் கூடுகளாயும் மண்டை ஓடுகளாயும் கிடந்து அவர்களை வரவேற்றன;

'சிறுவிறகால் தீமூட்டும்' சிரமத்தைக்கூட அந்தக் கிழவர்கள் பழசுகள் – C 90கள் தமது வழித்தோன்றல்களுக்கு வைக்கவில்லை,

---

## இறைவியே.........!

அன்னையே யருளுருவே யகிலமுமீன்
றளித்தருளு மரசி யேசீர்
மன்னுநிலை யியற்பொருளு மியங்கியலும்
வகைப்பொருளும் வகுத்த வாற்றல்
இன்னலற வெமைப்புரந்த வின்னமுதப்
பெருங்கடலே யிறைவி யேநின்
பொன்னடியை நிதந்துதித்தோர் கடைக்கணித்துக்
கருணைமழை பொழிவா யம்மா

சுவாமி விபுலானந்தர்

# தெய்வத்தமிழும் சிவசம்பந்தமும்

வித்துவான், பொன். அ. கனகசபை

தமிழ் என்னுஞ் சொல்லுக்கு இனிமை என்றும், இன்பம் என்றும் பொருள் கொள்வர். தமிழ் ஆகிய இன்பம் சிற்றின்பம், பேரின்பம் என இருவகைப்படும்.

சிற்றின்பம் உலகியல் இன்பம்; காதலிருவர் கருத்தொருமித்து விரும்பிக்கூடும் இன்பம். இந்த உலகியல் இன்பத்திற்கு அன்பு காரணம். தொடர்பு உள்ளவரிடத்தே கொள்ளும் உளநெகிழ்ச்சியாகிய உலக இன்ப அன்பு முதிர்ந்து, அன்புப்பந்தமாகிய தொடர்பு அற்று, அனைத்துயிர்கள் மேலும் துயர்கண்டுழி ஒப்ப உளம் நெகிழ்ந்து செல்லும் நிலையில் அது அருள் எனப்படும். அதனை வள்ளுவர் 'அருளென்னும் அன்பீன்குழவி' என உபசரிப்பர். அருள் வளர்ந்து வளர்ந்து வந்து பூரணப்படும் நிலையில் இன்பமாகப் பரிணமிக்கும். இந்த அருளே பேரின்பத்துக்குக் காரணம்.

அன்புடைமை காரணமாகப் பெற்ற உலகியல் சிற்றின்பம், அன்பு முதிர்ந்து முதிர்ந்து வந்து அருளாகும் நிலையில் அவ்வருளின் தன்மையினை அருளே கண்ணாகக் கொண்டு உணர்ந்து நிற்கவே, அந்த அருட்பார்வையில் பிராரத்தமாய் வந்துகூடும் (சிற்றின்பமாகிய) உலகசுகம் பரமசுகமாகும்.

''பெற்றசிற் றின்பமே பேரின்ப மாயங்கே
முற்ற வரும்பரி சுந்திபற
முளையாது மாயையென் றுந்திபற'' (திருவுந்தியார் 33)

இதுவே சாவா மூவாப் பேரின்பமாகிய தெய்வீக இன்பம்; தெய்வத்தமிழ், செந்தமிழ்; இன்பஅன்பு கொண்டால் தமிழருள் பேரின்பம் தரமாக வரும்.

தமிழ்ச்சங்கத் தலைமைப்புலவரான நக்கீரர் இயற்றமிழ் நூலான இறையனார் அகப்பொருளுரையில் 'அன்பினைந் திணைக் களவியல் எந்நுதலிற்றோ எனின் தமிழ் நுதலிற்று' என்று எழுதியுள்ளார். தமிழ் நுதலிய தமிழ்மூவாயிரம் எனப்படும் திருமந்திரமும் பேரின்பச் செய்தியையே பேசுகின்றது. அதன் ஆசிரியர் திருமூலரும் தமிழ் செய்யுமாறே தன்னை இறைவன் படைத்தனன் என்று கூறுகின்றார்.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்,
தன்னை நன்றாய்த் தமிழ்செய்யு மாறே." (திருமந்திரம் 152)

நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்தவர் ஞானசம்பந்தர். மன்னுயிர்கள் தன் பேரின்ப நிலையைச் சார்ந்து ஆனந்த அதீதம் (பரமானந்த அவசம்) ஆகும் பொருட்டே பரமசிவன் உயிர்க்குயிராய் நின்று ஐந்தொழில் ஆனந்த நாடகம் ஆடுகின்றார், இயலும் இசையும் கலந்ததே நாடகம். பரம்பொருளின் இயலைத் துவிதமாய் நின்று உணர்வது இயற்றமிழ் அந்த இறையியல் உணர்வுடன் அப்பரம் பொருளோடு அத்துவிதமாய் இசைவுறச் செய்வது இசைத்தமிழ் இயல் இசைவால் தானவனாய் ஏகமாதல் நாடகத்தமிழ். இவ்வாறு ஆதலினாலேதான் தமிழ் முத்தமிழாயிற்று.

முத்தமிழ் உணர்வுக்குத் தோற்றுவாயான சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதமாயிற்று.

"சதாசிவ தத்துவம் முத்தமிழ் வேதம்" என்பது திருமந்திரம் (149). சதாசிவ தத்துவத்திலிருந்தே முத்தமிழ் வந்ததென்பது இதனால் தெளிவாகின்றது. முத்தமிழ் ஓசை உருவாய்ப் பிறத்தற்குரிய முதலிடம் சதாசிவ தத்துவம். சதாசிவர் அருளிச்செய்த முத்தமிழ் வேத ஒலியால் அபரஞானமும், அதனால் பரஞானமும், அப்பர ஞானத்தால் வீடுபேறும் சித்திக்கும். இதனைத் திருமூலர் இதோபதேசத்தில் ஈசனை, "முத்தியை, ஞானத்தை, முத்தமிழ் ஓசையை" திருமந்திரம் (2076) என்று ஏத்திப்போற்

றுவதிலிருந்து தெரிகின்றது. இகத்தில் அம்மையினாலும் பரத்து அப்பனாலும் சுகபோகம் ஆன்மாக்களின் பக்குவ வேறுபாடு நோக்கி அருளப்படுகின்றது. இதற்காகவே சதாசிவர் சத்தியோடு கூடி அர்த்த நாரீசுவரர் வடிவாய் போகசிவமாய் எழுந்தருளியிருக்கின்றார். இதனைத் திருக் களிற்றுப்படியாரும் "அம்மை அப்பரே உலகுக்கு அம்மை யப்பர்" என்று கூறுகின்றது.

பேரின்ப வடிவமானது தெய்வம் அந்தத்
"தெய்வம் சிவமே சிவனருள் சமயம்
சைவம் சிவத்தொடு சம்பந்தம்" என்றார் சிற்றம்பலநாடிகள்.

பாசவீடும், சிவப்பேறுமே பேரின்பநிலை இதனையே சிவ ஞானியர் தெய்வத்தமிழ் எனப்போற்றுவர். பேரின்பமாகிய சிவபோகமே ஆன்மலாபம் எனப்படும் அந்த ஆன்மலாபமே ஊதியமாம்.

சிவசம்பந்தமுற வாழும் வாழ்வே உண்மை வாழ்வு. ஆன்மலாபமே நாமெடுத்த அரிய மானிடப்பிறவியின் பயன். அப்பயனைப்பெற ஒருமாதிரியுமில்லாத ஆத்மீக வாழ்வையே நாம் வாழ வேண்டும். ஆன்மலாபத்தையே பொருளாகக் கொண்டு நமக்கும் பிறருக்கும் ஊதியம் உண்டாகுமாறு வாழ்வோமாக.

"காரணி கற்பகங் கற்றவர் நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்சங்க நிதிவிதிசேர்
ஊருணி உற்றவர்க் கூரன்மற் றியாவர்க்கும் ஊதியமே"

(திருச்சிற்றம்பலக்கோவையார் 400)

## ஊருக்கு நல்லது சொல்வேன்

க. சி. குலரத்தினம்

ஊருக்கு நல்லது சொல்வேன் என்பதை, ஊருக்கு நல்லவை சொல்வோம் எனப் பன்மைப்படுத்தலாம். ஊருக்குச் சொன்னவை, நாட்டுக்குச் சொன்னவையாகப் படர்ந்து, உலகத்துக்குச் சொன்னவையாகப்பரவி, வியாபகமுற்றால் நன்றாகும். உலகத்துக்குக் கருத்தானவை நினைந்து உலகெலாம் என்றே புலவர்கள் உலக நன்மையைக் கூறுவர்.

"பாபம் செய்யாதிரு மனமே
பாபம் செய்தால் எமன் கொண்டோடிப் போவான்
பாபம் செய்யாதிரு மனமே — நாளைக்
கோபம் செய்தே ஏமன் கொண்டோடிப் போவான்
பாபம் செய்யாதிரு மனமே."

இவ்வாறு பாடிய கடுவெளிச்சித்தரே பரவெளியாய பரம்பொருள் நிலையைப் பாடியவராவர்.

"வெல்லும் அளவில் விடுமின் வெகுளியை
செல்லும் அளவில் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினல்
கல்லும் பிளந்து கடுவெளியாமே"

இவ்வாறு பாடியவர் மூத்தசித்தர், முன்னோடிச்சித்தர் திருமூலநாயனர். இவரைத் தொடர்ந்து வந்த சித்தர் காலத்தவரான கடுவெளிச்சித்தர், மேலும் பாடுவார்.

"சிவமன்றி வேறே வேண்டாதே — யார்க்கும்
தீங்கான சண்டையைச் சிறக்கத் தூண்டாதே
தவநிலை விட்டுத் தாண்டாதே — நல்ல
சன்மார்க்க மில்லாத நூலை வேண்டாதே"

முன்னர் வசிட்டர், விசுவாமித்திரர், காலாங்கி, வியாசர், சுகர் முதலானோர் சொன்னவழியில் வைசம்பாயனர் யக்ஞவல்கியர், சனகர் முதலானோர் சொன்னார்கள். இவர்கள் வழியிலேதான் சித்தர்கள் சொன்னார்கள். அவர்கள்

சொன்னவற்றை எம் முன்னோர் கேட்டு, நமக்குச் சொன்னவற்றை நாம் நம் பின்னவர்க்குச் சொல்வோம் கேளுங்கள் நீங்கள் கேட்டுப் பின், உங்கள் பின்னவர்க்குச் சொல்லுங்கள் இதுவே சனாதன தருமம்.

நாமெல்லோமும் ஆன்மாக்கள். ஆன்மாக்களுக்குச் சித்தாந்தப் பெயர் பசுக்கள். பசுக்களுக்கு வேலை, இறைவனாய பதியை வணங்கிப் பரகதி அடைதலேயாம்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறும் பொருட்டேயாம்' என்பது நாவலர் குழந்தைகளுக்குச் சொன்னவை. அவருக்கு நாமும் குழந்தைகளே.

இனி இடைக்காட்டில் பசுக்களை மேய்த்து நல்ல அனுபவம் பெற்ற கோனார் இடைக்காட்டுச்சித்தர். இவர் பாற்பசுக்களை மேய்த்த அனுபவத்தில் பக்குவான் மாக்களுக்கும் உள்ளதைச் சொல்லுகிறார்.

ஆதி பகவனையே — பசுவே
அன்பாய் நினைப்பாயேல்
சோதி பரகதிதான் — பசுவே
சொந்தம தாகாதோ.

ஐயன் திருப்பாதம் — பசுவே
அன்புற்று நீ பணிந்தால்
வெய்ய வினைகளெல்லாம் — பசுவே
விட்டோடும் கண்டாயே.

இன்னொரு சித்தர் ஏனாதி என்னும் படைத் தலைவனை முன்னிலைப்படுத்தி, என் கொண்டுவந்தீர் என்று கேட்டதும், அவர் தாம் கொண்டுவந்ததைக் குறிப்பிட்டுப் பாடுகிறார். வினாவும் விடையுமாக ஏனாதிச்சித்தர் பாடியவை ஊருக்கு நல்லதாகி, நாட்டுக்கு நல்லதாகி, உலகுக்கு நல்லதாக வேண்டும்.

''அன்புக்குள் அன்பாய் அறிவாய் இருக்கும்
அறிவுள்ள ஏனாதி என் கொண்டு வந்தீர்
முன்செய் தவத்தின் முறையின் வழியே
முடிவில்லா மெய்ஞ்ஞானம் கொண்டல்லோ வந்தேன்;

# இந்திய தத்துவ சிந்தனைகளும், உபநிஷதமும் — சில அறிமுகக் குறிப்புகள்

— கலாநிதி நா. சுப்பிரமணியன்

இந்து நாகரிகத்துறை உயர்கல்வி மாணவர்களுக்கு உதவும் நோக்கோடு; இத்துறை சார்ந்த அறிஞர்களால் எழுதப்படும் கட்டுரைகளையும் ஆலய மணி தொடர்ந்து வெளியிட இருக்கிறது. முதல் கட்டுரையாக விரிவுரையாளர் க நா. சு.வின் ஆக்கம் பிரசுரமாகிறது. — ஆ. ர்.

மனிதனுக்கும் புறவுலகுக்குமிடையிலான தொடர்புகளை ஆராயும் நோக்கில் பல்வேறு தத்துவ சிந்தனைகள் இந்திய மண்ணில் முளைவிட்டன. உலகாயதம், சமணம், பௌத்தம், சாங்கியம், யோகம், நையாயிகம், வைசேடிகம், மீமாம்சை, அத்வைதம், விசிட்டாத்வைதம். துவைதம், சைவசித்தாந்தம் ஆகிய தத்துவ வகைகளாக இவை வளர்ச்சிபெற்றன. இவற்றுட் சாங்கியம் முதலிய ஐந்தையும் ஐவகைத் தரிசனங்கள் எனவும் அத்வைதம் முதலிய மூன்றையும் மூவகை வேதாந்தங்கள் எனவும், தொகுத்துச் சுட்டுவது மரபு. மேற்குறித்த தத்துவ வகைகள் யாவற்றினதும் மூலக் கருத்தோட்டங்களை நாடுவோர்க்குக் கிடைக்கும் கால முதன்மையுடைய சான்றுதாரங்கள் வேத இலக்கியங்கள் ஆகும். கி. மு. 2500 ஆண்டுகள் வரை தொன்மை வாய்ந்தனவான வேத இலக்கியங்களிற் கருக்கொண்டிருந்த தத்துவ மூலங்களை ஆதாரங்களாகக் கொண்டவை என்ற வகையிலும் அவற்றை மறுத்து எழுந்தவை என்ற வகையிலுமே இந்திய தத்துவப் பிரிவுகள் முறையே வைதிகம் அவைதிகம் என்று பாகுபடுத்தப்பட்டன. உலகாயதம், சமணம், பௌத்தம் என்பன அவைதிக தத்துவங்கள் எனப்படுவன. ஏனைய யாவும் பொதுவாக வைதிக தத்துவங்களாகக் கொள்ளப்படுவன. இவ்விரு வகைக்கும் மூலகாரணமாகவோ அல்லது எதிர்மறைக் காரணியாகவோ அமைந்தவை வேத இலக்கியங்கள் என்பது இந்திய தத்துவவியலாளர்களது கருத்தாகும்.

வேத இலக்கியம் என்ற சொற்றொடர் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நால்வகை வேதங்களையும் குறிப்பது. இவ்வேதங்கள் ஒவ்வொன்றும் சம்ஹிதை, பிராம்மணம், ஆரண்யகம், உபநிஷதம் எனப்படும் பிரிவுகளை உடையன. இவற்றுள் முதலாவதான சம்ஹிதை என்ற பகுதியில் – குறிப்பாக இருக்குவேதத்தின் சம்ஹிதையில் – தத்துவ சிந்தனைக்கான ஆரம்ப ஐயவினாக்கள் சிலவற்றையும் சில கருதுகோள் களையும் அவதானிக்கலாம். இவ்வுலகுக்கும் புறம்பான ஏதாவது உள்ளதா என அறிய விழையும் சிந்தனையின் சாயலை இருக்கு சம்ஹிதையின் 'நாஸதீய' சூக்தத்திலும் யசுர் சம்ஹிதையின் கடைசி அத்தியாயத்திலும் காணமுடிகிறது. உலகம், உயிர் என்பன உண்மைப் பொருட்களே என அக்காலப் பகுதியில் நம்பப்பட்டமை இவற்றிற் புலனாகின்றது. காட்சிக்குப் புலனாகும் இவ்வுலகம் காணப்படாத ஏதோ ஒரு மூலப் பொருளினின்று உருவானது என்ற கருத்தும் இயற்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் தெய்வ சக்திகளால் நிகழ்வன என்ற நம்பிக்கையும் இவற்றிற் புலப்படுத்தப்பட்டுள்ளன. நித்தியமான ஆன்மா மரணத்தின்பின் நரகம் அல்லது சுவர்க்கம் செல்வதாக நம்பப்பட்டமை தெரிகிறது.

இவ்வாறு வேத சம்ஹிதைகளில் தத்துவ சிந்தனைக்கான கருக்கள் காணப்பட்டபோதும் அவை முறையான தத்துவ வடிவத்தைப் பெறவில்லை. உபநிஷதங்கள் என்ற பிரிவில் அமைந்த நூல்களிலேயே அத்தகு தத்துவ வடிவத்தை அவதானிக்க முடிகிறது. வேதசாரம் எனவும் வேதாந்தம் எனவும் சுட்டப்படும் உபநிஷதங்கள் ஆசிரியரும் மாணவரும் அருகிருந்து உரையாடும் பாங்கில் அமைந்தவை. உபநிஷதம் என அவற்றுக்கு அமைந்த பெயரே அருகிருந்து உரையாடுவதன் மூலம் பெறப்பட்ட அறிவு எனப் பொருள் தந்து நிற்பதாகும். இவ்வுரையாடல்களிற் பெறப்பட்ட பல்வகைக் கருத்துக்களே இந்திய தத்துவப் பிரிவுகள் பலவற்றுக்கும் தோற்றுவாய் ஆயின.

நால்வகை வேதங்களுக்கும் எல்லாமாக 112 உபநிஷதங்கள் உள்ளன. இவற்றுள் முக்கியமானவை 13 ஆகும்.

**அவை:** ஈசம், சாந்தோக்யம், பிருகதாரண்யம், ஐதரேயம், தைத்ரீயம் பிரச்னம், கேநம், கடம், முண்டகம், மாண்டுக்யம், கௌஷீதகீயம், மைத்ராயணீயம், சுவேதாஸ்வதரம்.

இவை பொதுவாக கி. மு. 1000 முதல் 500 வரை எழுந்தன எனக் கருதப்படுவன. கி. மு. 700 — 100 காலப் பகுதியில் எழுந்தன என்ற கருத்தும் உண்டு. இவற்றில் ஈசம், சாந்தோக்யம், பிருகதாரண்யகம் ஆகிய மூன்றும் தொன்மையானவையாகும். சாந்தோக்கியம் அளவில்

மிகப் பெரியதாகவும் உள்ளது. மைத்ராயணீயம், சுவேதாஸ்வதரம் என்பன கௌதமபுத்தர் காலமான கி. மு. 6ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவை எனக் கருதப்படுவன.

மேற்குறித்த உபநிடதங்கள் பெரும்பான்மையும் உரையாடல் முறையில் அமைந்தவை. ஆசிரியரிடம் மாணவரும் கணவனிடம் மனைவியும் தந்தையிடம் புதல்வனும் தத்தம் ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ள முயல்வதும் அரசவைகளில் அறிஞர் பெருமக்கள் நிகழ்த்திய விவாதங்களும் உபநிடத உரையாடல்களின் இயல்புகள் சாந்தோக்ய உபநிடதத்திலே 'ரைக்வர்', சத்யகாமஜாபாலர், உபகோசலர் ஆகியோரது வரலாறும் உபதேசம் என்பனவும் நாரதர் சனற்குமாரமுனிவர் ஆகியோரது உரையாடலும் முக்கிய இடம் பெறுகின்றன. பிருகதாரண்யக உபநிடதத்திலே ஜனகரின் சபையில் யாக்ஞவல்கியர் நிகழ்த்திய பெருவிவாதங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. கடோபநிடதத்திலே யமனுக்கும் நசிகேதனுக்குமிடையில் உரையாடல் நிகழ்கிறது. கௌஷீதகீய உபநிடதத்திலே இந்திரன் பிரதர்த்தன் என்ற அரசனுக்கு உபதேசிக்கிறுன்.

மேற்படி உபநிடத உரையாடல்கள் விவாதங்கள் என்பவற்றிற்குப் பொருளாக அமைந்த விடயம் உடலையும் உலகத்தையும் இயக்கும் சக்தி பற்றியதாகும். உடலுள் நின்றியக்கும் சக்தி ஆத்மா, ஜீவாத்மா என்னும் பெயர்களாலும் உலகம் முழுவதையும் தோற்றுவித்து இயக்கி நிற்கும் சக்தி பிரமம், பரமாத்மா என்னும் பெயர்களாலும் சுட்டப்பட்டன. ஜீவாத்மாவைப் பிரக்ஞாத்மா எனவும் உபநிடதங்கள் வழங்கின. இவ்விரு இயக்கு சக்திகளின் [ஆத்மா பிரமம் என்பவற்றின்] இயல்புகளை அறிந்து கொள்ளும் ஆர்வமே உபநிடத உரையாடல்களுக்கு அடிப்படையாயிற்று. நாரதர் சனற்குமார முனிவரிடமும் சுவேதகேது உத்தாலகரிடமும் நசிகேதன் யமனிடமும் மைத்ரேயி யக்ஞவல்கியரிடமும் எழுப்புவனவாக அமைந்த வினுக்கள் பலவற்றிலும் இந்த ஆர்வமே முனைப்பாக அமைந்தது. அவ்வினுக்களுக்குக் கொடுக்கப்பட்ட விடைகளே இந்திய தத்துவ சிந்தனைகள் பலவற்றுக்குமான அடிப்படைகளாக அமைந்தன. நமது சரீரத்திலே புலன்களுக்கும் மனத்துக்குப் புறம்பானதாக ஆத்மா என ஒன்று உண்டு என்பதும் அதுவே நமது சரீரத்தை இயக்கிநிற்கும் சக்தி என்பதும் பொதுவாக உபநிடதங்கள் பலவற்றிலும் காணப்படும் கருத்து நிலையாகும். அதேபோல இந்தப் பரந்த பிரபஞ்சம் முழுவதும் பிரமம் என்ற மூலப் பொருளினின்று உருவானதென்பதும் அதனுலேயே இயங்குகின்றதென்பதும் உபநிடதங்கள் பலவற்றிலும் வலியுறுத்தப்பட்டுள்ளன.

''வாள் உறையுள் இருப்பது போலவும், பறவைகள்
கூடுகளில் இருப்பது போலவும் பிரக்ஞாத்மா
இந்த உடலின் உரோமங்கள் வரை நிறைந்துள்ளது''

என கௌஷீதகீய உபநிடதம் குறிப்பிடுகிறது.

''உடலின் ஒரு பகுதியில் கட்டைவிரலுக்குச் சமமான
இடத்தில் மிக நுணுக்கமாகவுள்ள இந்த ஆத்மாவைத்
தியானம் செய்பவன் முத்திநிலை எய்துகிறான்''

என் மைத்ராயணீ உபநிடதம் குறிப்பிடும்.

பிரம்மத்தின் இயல்பைக் கேனோ உபநிடதம்,

''எதனைச் சொல்லால் வினக்க முடியாதோ எதிலிருந்து
சொல் பிறந்ததோ அதுவே பிரமம் என அறிக''

எனக் குறிப்பிடும். அப் பிரமமே யாவற்றுக்கும் தோற்றக் காரணி என்பதை முண்டக உபநிடதம்,

''நிலத்தில் மூலிகைச் செடி முளைவிடுவது போலவும்
உடலில் மயிர் முளைப்பது போலவும் எல்லாப்
பொருளும் பிரமத்திலிருந்தே தோற்றம் பெறுகின்றன''

என்று உபமானமூலம் விளக்குகின்றது.

இவ்வாறு பிரமம் ஆத்மா ஆகிய இரு பொருட்களைப் பற்றிப் பேசும் உபநிடதங்களில் இவ்விரண்டும் இரண்டல்ல ஒன்றே என ஊகிக்கவும் ஒன்றின் இருநிலைகளே எனக் கருதிக்கொள்ளவும் தக்க வாக்கியங்களும் காணப்படுகின்றன.

''பல மரங்களின் பூக்களிலிருந்து பெறப்பட்ட தேன்கள்
ஒன்றானபின் இது இந்த மரததேன் எனப் பிரித்து நோக்க
முடியாதவாறுபோல மோட்சம் பெற்ற ஆத்மாவுக்கும்
பிரமத்துக்கு மிடையில் வேறுபாடில்லை.''

என்பது சாந்தோக்ய உபநிடதத்திற் பெறப்படும் கருத்து.

''நதிகள் கடலிற் கலந்துதம் மறைந்து விடுவது போல
ஜீவன் பிரமத்திற் கலந்ததும் அதன் எல்லா
உருவங்களும் மறைந்து விடுகின்றன.''

என பிருகதாரண்யக உபநிடதம் குறிப்பிடும்.

''அந்தப் பிரம சக்கரத்திலே அன்னப் பறவை சுற்றித் திரிகிறது.
அது பிரமஞானம் பெற்று அந்தப் பிரமத்திலேயே நின்று
அமுதமயமான முத்தி அடைகிறது.''

என்பது சுவேதாஸ்வதர உபநிடதக் கருத்து.

இத்தகைய கூற்றுக்கள் ஆத்மா பிரமம் என்பன இருவேறு பொருட்களாகக் கொள்ளப்பட்டாலும் அவை ஒரு குறித்த நிலையிலே ஒன்றேயாகி விடுகின்றன என்பதைப் புலப்படுத்தி நிற்பன. இவை தவிர உபநிடதங்களில் ஆங்காங்கே காணப்படும் மஹாவாக்கியங்கள் ஆத்மா பிரமம் ஆகியவற்றின் ஒருமையையே சுட்டுவனவாகப் பொருள் தந்து நிற்பன. 'தத்வமஸி,' 'சர்வம் கல்பிதம் பிரஹ்ம, என்பனவாகச் சாந்தோக்யத்தில் இடம்பெறும் மஹா வாக்கியங்களில் ஆத்மாவே பிரமம் என்பதும் எல்லாம் பிரமமயமே என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன. இவற்றைப்போலவே ஏனைய உபநிடதங்களிலே 'அஹம் பிரமமாஸ்மி' [நானே பிரமமாக உள்ளேன்], 'சோஅகம் அஸ்மி' [அவன் – பிரமம் – நானுவே உள்ளேன்] என்ற பொருள்தரும் மஹா வாக்கியங்கள் உள்ளன.

இவ்வாறு உபநிடதங்கள் உடலையும் உலகையும் இயக்கும் சக்திகள் தொடர்பாக முன் வைத்த கருத்துசகளைக் குறிப்பிடத்தக்க சில அம்சங்களில் ஏற்றோ அல்லது மறுத்தோதான் இந்திய தத்துவப் பிரிவுகள் பலவும் உருவாயுள்ள என்பது இந்திய தத்துவ சிந்தனை தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டோரது கருத்தாகும். குறிப்பாக மூவகை வேதாந்தங்களும் உபநிடதங்களின் தளத்தில் உருவானவையே என்பது வெளிப்படை. உபநிடதங்களின் சாராம்சமான பிரமசூத்திரத்திற்கு எழுதப்பட்ட உரைகளின் முரண்பட்ட நிலையே மூவகை வேதாந்த விரிவு எனபது தெளிவு. உலகாயதம் என்பது உபநிடதங்கள் சுட்டும் ஆத்மா, பிரமம் என்பவற்றை மறுப்பதன்மூலம் உபநிடதங்களுக்கு எதிர்நிலையத் தத்துவமாகின்றது. பௌத்தம் ''எதுவுமே நிலையான உண்மைப்பொருள் அல்ல; கணந்தோறும் மாற்றம் பெறுவன'' என்று சூனியவாதம் பேசுவதன்மூலம் உபநிடத சிந்தினக்கு மறுப்பாக அமைகிறது. சமணம் சீவன் அசீவன் என உலகப்பொருட்களை இரு கூறுகக் காண்பது. சாஸ்சியம், யோகம் ஆகிய தர்சனங்கள் உலகப் பொருட்களைப் புருஷன் – பிரகிருதி என இரு கூறுக்குவன இவற்றின் பகுப்பு முறைகள் ஒரு வகையிலே உபநிடதங் கூறும் ஆத்மா, உலகம் என்பவற்ரேடு பொருந்துவன. உபநிடதங்களின் பிரமம் பற்றிய கருத்து இவற்றில் இடம் பெறுமை ஒரு முக்கிய வேறுபாடு ஆகும். சுவேதாஸ்வதார உபநிடதத்திலே இறை, உயிர், இயற்கை ஆகிய முப்பொருளும் உண்மை எனப் பேசப்படுவதனுல் வசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் மூன்றுக்குமான அடிப்படைகளை இவைகொண்டுள்ளாமை புலனுகும். இவை முப்பொருளுண்மை பேசுவன என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. இவ்வுபநிடதம் ருத்ரனை சிவனின் மகிமை பேசப்படுவதனுல் சைவ சித்தாந்தத்திற்கான சிறப்பான மூலாதாரங்களில் ஒன்றுக இதனைக் கொள்ள இடமுண்டாகிறது.

சாந்தோக்யம், கடம் ஆகிய உபநிடவங்களிலே ஆத்மாவின் மறுமைபற்றியும் பேசப்பட்டுள்ளது. நல்வினை தீவினை என்பவற்றுக்கேற்ப ஆத்மாக்கள் மறுபிறப்புக்களை எய்துவன என்பது சாந்தோக்கியத்திலே தெளிவாகப்பட்டுள்ளது. இந்திய மதங்களிலே சிறப்பாகப் பேசப்படும் 'கர்மம் மறுபிறப்பு'க் கோட்பாட்டிற்கு இவை மூலங்கள் ஆகின்றன.

இவை யாவற்றையும் நோக்கும் போது இந்திய தத்துவ சிந்தனைகள் பலவற்றுடனும் உபநிடதங்கள் உடன்பாடாகவோ அன்றேல் எதிர்மறையாகவோ உறவு கொண்டுள்ளமை தெளிவாகும். இந்திய தத்துவங்கள் பலவற்றுக்குமான மூலாதாரங்களாக இற்றைவரை அறியப்பட்டுள்ள நூல்கள் உபநிடதங்களின் காலத்துக்குப் பிற்பட்டவை என்பதால் உபநிடதங்களின் கருத்து நிலைகளை ஆதரித்தோ அல்லது சார்ந்தோ அன்றேல் எதிர்த்தோ தூர்ன் இவை எழுந்திருக்க வேண்டும் என்று இந்திய தத்துவ வியலார் கருதுகின்றனர். இக்கருத்து நிலை இதுவரை முழுமையான ஆய்வுக்குட்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக ஐவகைத் தரிசனங்கள் எனப்படுவன வைதிகதத்துவங்கள் என்ற வகையில் வேத உபநிடத சிந்தனைகளைச் சார்ந்தன என்றே சொல்லப்பட்டுள்ளன. ஆனால் இவற்றுக்கும் உபநிமிடங்களுக்குமுள்ள உறவுநிலை போதிய ஆதாரங்கள்மூலம் இதுவரை எடுத்துக் காட்டப்பட்டதாகத் தெரியவில்லை இந்திய தத்துவ ஆய்வில் ஈடுபடுவோர் இதனைக் கவனத்திற் கொள்வார்களானால் உபநிடதங்களுக்கும் இந்திய தத்துவங்களுக்குமுள்ள தொடர்வு பற்றிய வரலாற்றில் தெளிவற்ற ஒரு பகுதி தெளிவுபெற வாய்ப்பு உண்டாகலாம்.

---

அடுத்த இதழில்

சிற்பி எழுதிய

சிறுகதை

**தெய்வீகம்**

வருகிறது!

பாலாவியின் கரைமேல்.......!

# திருவாசகத்திற்கு ஒரு சுவாமி



நல்லூர் வடக்கு வீதியில் உள்ள முருகன் அருள் பிரவாகம் என்னும் இல்லத்து முன்வாசலில் அவர் இருக்கிறார். மஞ்சள் மாலைப் பொழுது கருக்கூட்டும் நேரம். நானும் என் மனைவியும் அங்கே செல்கிறோம். சிவானந்தா.... வா ...வா....!..இதைப் பிடி ... திற .... கண்ணில்படும் பாட்டைப்படி ... என்றபடி திருவாசகப் புத்தகத்தை நீட்டுகிறார்.

வணங்கி வாங்கி பக்கம் ஒன்றைப் பிரித்தேன். "கருடக்கொடியோன் காணமாட்டா கழற்சேவடி என்னும் பொருளைத் தந்து ...." என்னும் தொடக்கத்தை யுடைய திருவாசகம் வந்தது. படித்தேன். "சரி... கழற் சேவடியை உனக்குத் தந்திருக்கிறான் அதைப்பற்றிக் கொண்டு நீ நடக்க வேண்டியதுதானே.... எந்தச்சேவடி....? கருடக்கொடியோன் காணமாட்டாக் கழற் சேவடி ....வேறு என்ன?

---

திருமுறைகளில் திருவாசகமே என்நெஞ்சை முதல் தொட்ட பாடம். படித்துப்படித்து அழுவதில் ஒரு ஆனந்தம். ஊனை உருக்கிய அனுபவம் உறைப்பான பக்திக்கு அத்திபாரமிட்டது. கண்டோரால் மட்டுமென்ன கேட்டோராலும் விரும்பப்படும் தன்மை அதற்கு உண்டு. இதனைச் சின்னவயதிலேயே தெளிந்திருந்ததால் சபாரத்தினம் சுவாமிகள் நன்றாக எனக்கு விளக்கமானார். ஊரொன்றைநினைத்ததும் அவ்வூர் கோயிலோ தண்ணீரோ பெரியாரோ சாப்பாடோ நினைவுக்கு வருதலுண்டு. கேடில்லாத கேதீச்சரத்தை நினைத்தவுடன் திருவாசகத்தை தியானிக்கும் சுவாமிகள் நினைவுக்கு வருவார்கள்.

சுவாமிகளை எனக்கு யார் காட்டினார்...? எண்ணிப் பார்க்கிறேன். திருவாசகத்திற்கு வாச்சியமான தில்லை நடராஜனோ? வாக்கியத்திற்கு வாச்சியமானவன் வாக்கி யத்தைக்காட்ட திருவுள்ளங் கொண்டானோ? கௌரியம் மன் வாசலில் வித்துவான் பொன். கனகசபையில் நின்று காட்டினான். கழுக்குன்றிலே நின்று மணிவாசகருக்குக் காட்டியவன் கௌரியம்மன் வாசலுக்கு கனகசபையை வரச்செய்து தோற்றிநின்று சபாரத்தினத்தைக் காட்டி னான். சபை, சபா, சிவா மூன்றும் ஒன்றாகி நின்று விளக் கியும் விளங்கியும் தெளிந்தன போலும்.

சுவாமிகளின் உடம்பு பழுத்த பழம் போன்றது. மனமும் பழுத்த அடியார் அவர். மனப்பழுப்பின் வாசம் திருவாசகமாய் மணந்தது. சமய உலகில் சாமிகளும் உண்டு. (சாமி என்ற தானியம் போல) அச்சாமிகள் வெந்து, பதமாகி சுவாமிகள் ஆகவேண்டும். இல்லையேல் சம்சாரிகளுக்குள் இருக்கும் ஆசை அவா பற்று பித்து போன்றவை சித்தத்தை அழுகவைத்துவிடும். கொண்ட கோலத்தின் குறிக்கோள்மாறி வஞ்சப்புலன் ஐந்தின் வழிச் சென்று பேரர் பேர்த்தியர் பெயரையே சொல்லவைக்கும். சிவநாம உச்சரிப்பு விடைபெற்றுவிடும். சபாரத்தின சுவா மிகளைப் பின்பற்றி திருவாசகத்தை ஓதி ஓதி உள்ளொளி பெருக்குவார்களாக.

சில மனிதர்களைப்போல் சில நூல்களும் பாக்கியம் செய்தே தோன்றுகின்றன. பலரால் படிக்கப்படுவது சில ரால் பிடிக்கப்பட்டு இரண்டற நின்று; தானே அவராகி அவரால் தன் கருத்துக்களைப் பரம்பவைக்கும் விந்தை வியக்கத்தக்கது. பிறமொழிகளுக்கில்லாத இப்பொசிப்புக்கு தமிழ்மொழி தவஞ்செய்திருக்க வேண்டும். திருக்குறளார் திருவாசகமணி கம்பரடிப்பொடி, திருப்புகழ்மணி, சிலம் புச் செல்வர் என்று புதுப்பிறப்பெடுத்தோர் பட்டியல் தமிழ் தாயிடமே உண்டு. இதைவிட ஒருபடி மேலே போய் தேவார சுவாமிகள், திருவாசக சுவாமிகள் என்று

அநுபூதி நிலையைத் தொட்டவர்களையும் தமிழன்னை தந்திருக்கின்றாள்.

திருவாசகத்திற்கு உருகியதுபோல் திருவாசக சுவாமிகளின் மறைவுக்கும் உருகி, உதவி, ஓடித்திரிந்து அவர்கள் நாமம் சிறக்க பாடுபட்டவர்களின் பாதங்களை மனத்தால் நினைந்து வணங்குகின்றேன்.

— ஈழத்துச் சிவானந்தன்

---

இனி வரும் மணியிலே! ..........

**தவத்திரு** குன்றக்குடி அடிகளார்

**வித்துவான்** வசந்தா வைத்தியநாதன்

**பேராசிரியர்** கா. சிவத்தம்பி

**பேராசிரியர்** பொ. பாலசுந்தரம்பிள்ளை

**கலாநிதி** ப. கோபாலகிருஷ்ணன்

**கலாநிதி** சி. க. சிற்றம்பலம்

அகளங்கன்

வி. ஏ. சிவராஜா B. A.

சைவக்கிழவி

ஆகியோரும் பிறரும் எழுதுகிறார்கள்.

---



யாழ் பூமிக்குப் பெருமை சேர்க்கும் கல்லூரிகளுள் யாழ். இந்துக்கல்லூரியும் ஒன்று. இந்தக்கல்லூரி நிறுவப்பட்டதன் நோக்கம் முழுமைபெற உழைத்த ஆசிரியர்கள், அதிபர்களில் அண்மையில் அமரரான அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். மாண்புடைய மாணவர்களை உருவாக்குபவர்களிடம் இருக்க வேண்டிய சகல மாண்புகளையும் தம்முள் வளர்த்திருந்த ஆளுமையாளர். அக ஒழுக்கம் புற ஒழுக்கங்களால் விழுப்பங்கள் பெற்றவர். இந்துக்கல்லூரியை வெறும் நிறுவனமாக நினைக்காமல் ஓர் இயக்கமாக எண்ணியவர் – இயங்கியவர்.

இவரிடம் நான்படித்த காலங்களும் பழகியநேரங்களும் பொன்னானவை ஆங்கிலத்தில். சொற்ப அறிவானாலும் அழகிய உச்சரிப்புக்கு இவரே காரணர். இவரிடம் படித்த Round the World in Eighty Days சும் Deepak Readersசும் இன்றும் இவருடைய வாய்க்குவிவையும் சொண்டுச் சுளிப்பையும் மீசைத் துடிப்பையும் விரிந்து குவியும் விரல்களையும் நினைவூட்டுகின்றன. எனக்கு மட்டுமா...? எத்தனையோ மாணவர்களுக்கு அந்தநாள் நினைவுகள் இந்த நேரத்தில் வரத்தான் செய்யும். கடவுளுக்குப் பயந்தவர் கடமைக்குப் பணிந்தவர் சமூகவளர்ச்சியில் நாட்டங்கொண்டவர், இவ்வளவு விரைவில் எம்மை விட்டுப் பிரிந்தமை கவலைக்குரியதே. அன்னாரைப்பற்றி அவர் மாணவர்கள் சார்பாக அணுகிப் பழகிய மாணவரான சோ. ப. அடுத்த பக்கத்தில்எழுதுகிறார்.

— ஈழத்துச்சிவானந்தன்

# பி. எஸ். என்றொரு பெருமகன்

சோ. பத்மநாதன், B. A. (Hons) Dip - in - A. p. p Ling

சென்ற தலைமுறையைச் சேர்ந்த நல்லாசிரியர்களை இன்று எத்தனைபேர் நினைத்துக் கொள்கிறார்கள்! பாடசாலைக்கும் ரியூற்றறிக்குமாக ஆசிரியர்களும் மாணவர்களும் அஞ்சல் ஓட்டம் ஓடும் இக்காலத்தில், சேவையே உயிர் மூச்சாகக் கொண்ட ஒரு தலைமுறை அருகிவிட்டது வியப்பில்லைத்தான். ஆனால் அந்த மகத்தான மனிதர்களுடைய வாழ்க்கையை நினைத்துப் பார்ப்பது நாம் எங்கே நிற்கின்றோம் என்று அறிய உதவும்.

நல்லாசிரியர் என்று பேரெடுத்தவர் பி. எஸ். குமாரசாமி அவர்கள். யாழ். இந்துக் கல்லூரியில் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்புகளில் பல்லாண்டுகள் தொடர்ந்து இலங்கைச் சரித்திரம் கற்பித்து வந்தார். மாணவர் புலன் வேறெதிலும் செல்லாதவாறு அவர்களை ஈர்ப்பதில் நிபுணர் அவர். அந்நாளில் ஆங்கில மொழிமூலம் கல்வி, ஆற்றொழுக்கான ஆங்கிலத்தில் அவர் விரிவுரை நிகழ்த்துவார். 1955-56 இல் அவரிடம் கற்கும் பேறு பெற்றேன். மேலதிக வகுப்புகளுக்கும் குறைவில்லை. மேலதிக வகுப்பு நடக்கும் வேளைகளில் எமக்குத் தேநீரும் வழங்குவார். (யாழ். இந்து மாணவரிடையே 'மலையாள'த்தின் தேநீர் பிரசித்தமானது!)

பி. எஸ். அவர்களிடம் கற்ற மாணவர்கள் விரிவுரையாளர்களாக, பேராசிரியர்களாக, அரசாங்க அதிபர்களாக, அமைச்சின் செயலாளர்களாக, ஆணையாளர்களாக, சட்டத்தரணிகளாக, சிந்தனையாளர்களாக, எழுத்தாளர்களாக, தொழிலதிபர்களாக, சமூக விஞ்ஞானிகளாக ஜொலிக்கிறார்கள். ஆனால் இந்தத் தன்னடக்கம் மிக்க மனிதரோ எதற்கும்— எவருக்கும்—உரிமை கோரியதில்லை.

கற்பித்தலுக்குப் புறம்பான செயற்பாடுகளி லும் அவர் ஆர்வம் காட்டி வந்தார்; மாணவரை ஈடு படுத்தினர். 1956 இல் உயர்தர வகுப்பு மாணவர் மன் றம் நாடகம் ஒன்று நடத்த விரும்பியது. காப்பாளராகிய பி. எஸ். அமரர் யாழ்ப்பாணம் தேவனை அழைத்து வந் தார். 'தேவன்' தம்முடைய நாடகப் பிரதியுடன் வந்து சேர்ந்தார். மிகுந்த தயக்கத்துடன் எனது நாடகப்பிரதி யொன்றைக் கையளித்தேன். தேவனுடைய பெருந்தன்மை யாருக்கு வரும்! தம்முடைய பிரதியை ஒதுக்கிவிட்டு என்னுடைய பிரதியைத் தேர்ந்தெடுத்தார் தேவன்! பிற கென்ன? மும்மரமான ஒத்திகை. நீண்டதொரு இடை வெளிக்குப் பின் இந்துக் கல்லூரியில் நாடகம் ஒன்று ("மலர்ந்த வாழ்வு") அரங்கேறியது. எம் மாணவப் பரு வத்துக் கனவை நனவாக்க பி எஸ். ஆற்றிய தொண்டு மறக்க முடியாதது. மேடை ஒழுங்கு, மண்டப ஒழுங்கு, ஒலி - ஒளி அமைப்பு என்று ஓடி ஓடிப் பணியாற்றினர் அவர்.

பி. எஸ். தலைமையில் நாம் சென்ற கல்விச் சுற்றுலா இன்னும் நெஞ்சில் பசுமையாக உள்ளது. அநுராதபுரம், பொலனறுவை, சிகிரியா, தம்புல்ல என அவர் காட்ட, நாம் கண்டவை பல. பழைய மாணவர்களோடு தொடர்பு கொண்டு ஆங்காங்கு உண்டி, உறையுள் வசதிகள் செய் திருந்தார். சிறந்த ஏற்பாடுகள். நாம் மிக மகிழ்ச்சியுடன் கழித்த நாட்கள் அவை!

யாழ். இந்துக் கல்லூரி வேறு, தாம் வேறு என்று கருதாதவர் அமரர் பி. எஸ். உதைபந்தாட்டப் போட்டி களுக்குத் தவறாது சென்று நம் வீரர்களை உற்சாகப் படுத் துவார். 1954 இல் நடந்த இறுதிச் சுற்றுப் போட்டியின் முடிவில் எதிரணியினர் வன்முறையில் இறங்கி கணேச லிங்கத்தை (சாத்திரியை)யும் இவரையும் தாக்கியது முண்டு. ஆனல் அத்தகைய சலசலப்புக்கள் அவரைப் பாதிக்கவில்லை. அர்ப்பணிப்புக்கு (Dedication) மறு பெயர் P. S!

பி. எஸ். அதிபராக இருந்த காலம் நெருக்கடிகள் மிகுந்த காலம் – ஹர்த்தால், கடையடைப்பு, ஊரடங்கு சட்டம் என திடீர் திடீரென்று போக்குவரத்து ஸ்தம்பித்துவிட, மாணவர்கள் அல்லற்படுவதுண்டு. அத்தனை மாணவரையும் வீடுகளுக்கு அனுப்பிவிட்டே, தாம் வீடு செல்வார் அவர். (இத்தனைக்கும் அவரிடம் சொந்த வாகனம் இல்லை!

அவர் இந்துக் கல்லூரிக்கு அதிபராகியமை, அவரை-அவர் தொண்டுள்ளத்தை – நன்கறிந்த நெஞ்சங்களைக் குளிரவைத்தது ஏ. குமாரசாமி, வி. எம். ஆசைப்பிள்ளை, சி. சபாரத்தினம், மு. கார்த்திகேசன், என், சபாரத்தினம் முதலிய புகழ்பூத்த அதிபர்கள் வரிசையில் அவர் சேர்ந்து கொண்டார். அதற்கான தகுதியும் அவரிடம் இருந்தது.

அப்பெருமக்கள் பேணிய மரபைக்காத்து இப்பெருமான் நிமிர்ந்து நின்று தமிழ் மக்களின் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்டார்.

இறுதி நாட்களில் பி. எஸ். மனம் நொந்து போயிருந்தமை ஊரறிந்த செய்தி. ஆனுல், தம்மோடு முரண்பட்டவர்களைத் தூற்ருது – புறங்கூருது – தான் ஒரு பண்பாளன் என்பதை நிரூபித்த பி. எஸ். மாணவர் உள்ளங்களில் நந்தாவிளக்காய் ஒளி வீசுவார்.

---

அடுத்த இதழில்.....!

# எனது லண்டன் பயணம்

பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்

எழுதுகின்ருர்.

---

திருக்கோயில் மணிபோல் திருத்தமிழின் மணியாய்

ஆலயமணி சிறக்க

எமது வாழ்த்துக்கள்

**லஷ்மி டிரேட் சென்டர்**

**Luxmi Trade Centre**

General Merchants & Commission Agents

40 A, 4th Cross Street,

COLOMBO-11

ஆலயமணி இதழ்

ஆண்டாண்டு காலமாய் டாண்... டாண்... என்று

ஒலித்து வளர வாழ்த்துகிறோம்.

NEW KALYANI JEWELLERS

No. 87, Kannathiddy,

JAFFNA

வருக! வருக!!

## ஆலயமணி இதழை

வரவேற்கிறோம்

# K. V. S. NAGALINGAMPILLAI & SONS

Importers, General Merchants & Commission Agents

165, Prince Street,

COLOMBO - 11

---

உள்ளூர் விளைபொருளுக்கு ஊக்கமளிப்போம்

உள்ளூர் விளை எழுத்துக்களுக்கு ஆக்கம் அளிப்போம்

## ஆலயமணி இதழுக்கு

எங்கள் ஊக்கமும் ஆக்கமும் என்றும் உண்டு.

# மேகியூரி டிரேடிங் கம்பனி

## Mercury Trading Company

**203, Keyzer Street,**

**COLOMBO-11**

ஆலயமணியின் ஆகும் நெறிக்கு
அன்பு வாழ்த்துக்கள்

N. K. MYLVAGANAM

68, 4th Cross Street,
COLOMBO-11

ஆலயமணி இதழ் வளர எங்கள்
வாழ்த்துக்கள்

வெங்கா டிரேடர்ஸ்

Vengha Traders

156/B, Maliban Street,
COLOMBO-11

தமிழ்ச் சஞ்சிகை உலகில்
ஆலயமணி தனித் தன்மையுடன்
வளர வாழ்த்துகிறோம்

KUMARASREE TRADES
General Merchants & Commission Agents
155, Prince Street,
COLOMBO-11

ஒரு பேச்சாளரின் பேறு
ஆலயமணிக்கு
மூச்சாய் நின்று முயல்கவே

Victoria Bakery & Groceries LTD.
148, Justice Akbar Mawatha,
COLOMBO-2

வீட்டுக்கு வீடு விளக்குப்போல்

வீடுகள் தோறும் ஆலயமணி இதழ்

விளங்க வாழ்த்துகிறோம்

# சரவணஸ் டிரேடிங் கொம்பனி

## Saravanas Trading Company

61, 4th Cross Street,

COLOMBO-11.

*Branch*:

No 3, st. Andrews Drived Road,

NUWARAELIYE.

ஆலயமணியின் அருள்நெறிப் பயணம்

திக்கெட்டும் தொடர

எங்கள் வாழ்த்துக்கள்

# KUMARAVEL COY.

General Merchants & Commission Agents

Dealers in oil, Cattle - Foods & Provisions

217, 5th Cross Street,

COLOMBO-11

ஆலயமணிக்கு
வெள்ளிப்
பணியின்
வாழ்த்து.

நல்லதையே
செய்வோம்.

சமயப்பணி தமிழ்ப்பணி சமூகப்பணி செய்வோம்.
ஊர்கள் தோறும் கோயில்களைப் புனரமைப்போம்.
எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணுவோம்.
பெரியவர்தம் நினைவுநாள்களைக் கொண்டாடுவோம்.
கிடைத்தற் கருமையான நூல்களை அச்சேற்றுவோம்.
இயன்றளவு கல்விப்பணியை இலவசமாகச் செய்வோம்.
எல்லோரும் யோகாசனஞ் செய்ய வழி செய்வோம்.
சமய சஞ்சிகையான ஆலயமணிக்கு ஆதரவு கொடுப்போம்.

மில்க்வைற் தயாரிப்புகளுக்கு நீங்கள் கொடுக்கும் ஆதரவு நாட்டிற்கும் மக்களுக்கும் பயனுள்ள நற்பணிகளுக்கே உதவுகிறது.

மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளைச் சேகரித்துக் கொடுத்துப் பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

# மில்க்வைற்

## சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 23233

நீங்கள் வளரும் போதே
உங்கள் சேமிப்பு வளர்வதை
உறுதி செய்யுங்கள்.
மாதாந்த சிறுதொகை சேமித்து
குறுகிய காலத்தில் பெருநிதி பெற
விரும்புகிறீர்களா?

## "ஷப்ரூ" வழிகாட்டுகிறது.

## "ஷப்ரூ" வின் உழைக்கும்போதே

சேமிக்கும் திட்டத்தில் இன்றே சேருங்கள்

| | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| ரூபா | 12% | 14% | 16% |
| 100/- | 1280/93 | 2783/41 | 4643/27 |
| 200/- | 2561/86 | 5566/82 | 9286/54 |
| 300/- | 3842/79 | 8350/23 | 13929/81 |
| 400/- | 5123/72 | 11133/64 | 18573 08 |
| 500/- | 6404/65 | 13917/05 | 23 16/35 |

உங்கள் நிதியைப் பெருக்க மேலும் பல "புதிய வழிகள்"

## "ஷப்ரூ" வின்

உதவியை நாடுங்கள்

## "ஷப்ரூ" யுனிக்கோ பினன்ஸ் லிமிடெட்

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4.
தொலைபேசி: 589310,
500576.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 22073.

இச்சஞ்சிகை 388/7 பருத்தித்துறை வீதி, நல்லூர் முகவரியில் வாழும் ஆசிரியரும் வெளியிடுபவருமான புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களால் யாழ். ஸ்ரீ லங்கா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.